பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 27, சனிக்கிழமை 12.08.2017 கதிர் 279

## இலங்கையின் முதல் தமிழ்ப் பெண் விமானி நேற்று நாடாளுமன்றில்!



கொழும்பு, ஓக.12

இலங்கையின்முதல்தமிழ்ப்பெண் விமானி நேற்று நாடாளுமன்றத் துக்குச் சென்றிருந்தார்.

சபாநாயகர் கரு ஜயசூரியவின் தலைமையில்நேற்றுக்காலைநாடாளு மன்றம் கூடியது இதன்போது இலங் கையின் முதல் பக்கம் 18 »

# நல்லாட்சி அரசுக்கு நெருக்கடி கொடுக்க கூட்டமைப்பு முடிவு!

## அரசமைப்பு உருவாக்க முயற்சிகளில் மெத்தனப்போக்கால் கடும் அதிருப்தி



கொழும்பு, ஓகஸ்ட் 12

அரசமைப்பு உருவாக்க விடயத்தில் நல்லாட்சி அரசு தொடர்ந்து மெத்தனப்போக்கைக் கடைப்பிடித்து வருகின்றது எனச் சீற்றம் அடைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை, அரசை வழிக்குக் கொண்டுவரச் செய்யும் முயற்சியாக அரசுக்கு நெருக்கு தலைக் கொடுக்கும் நடவடிக்கைகளை விரைவில் முன்னெடுக்க விருக்கின்றது. பக்கம் 18 »

## துன்னாலையில் கைதான 28 பேருக்கும் மறியல்!

வடமராட்சி, ஓக.12

வடமராட்சி – துன்னா லைப் பகுதியில் பொலி ஸார் மற்றும் விசேட அதிர டிப்படையினர் இணைந்து மேற்கொண்ட சுற்றி வளைப்புநடவடிக்கையின் போது கைதுசெய்யப்பட் டவர்களை விளக்கமறிய லில் வைக்குமாறு பருத்தித் துறை நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது வன்முறைச் சம்பவங்களு டன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 28 பக்கம் 18 »

## நோர்வேத் தூதுவருடன் சம்பந்தன் சந்திப்பு



கொழும்பு,ஓக.12

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் தோர்ப்ஜோன்கெஸ்ராட் செதர்க்கும்எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந் தனுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது. பக்கம் 18 »

### தேசிய அரசின் இரு வருட பூர்த்தி

## சனி பிடித்த நாளாக பிரகடனம் செய்து ஓகஸ்ட் 17 நாடு முழுவதும் போராட்டம்

கொழும்பு, ஓக.12

தேசியஅரசின்இரண்டு வருடப் பூர்த்தியை இலங் கைக்கு சனியன் பிடித்த நாளாகப் பிரகடனப்படுத்தி நாடு முழுவதும் போராட் டத்தை முன்னெடுக்க மஹிந்த அணி தீர்மானித் துள்ளது என அந்த அணி யின் பேச்சாளர் ஒருவர் கூறி யுள்ளார்.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஜனாதி பதி மைத்திரிபால சிறி சேன தலைமையிலான அரசு ஆட்சிப்பீடம்ஏறியது. அதன் பின்னர் மீண்டும் ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி பக்கம் 18 »

## கிணற்றில் பாய்ந்து விளையாடிய இரு சிறுவர்கள் சாவு!

திருகோணமலை,ஓக.12

திருகோணமலை உப்பு வெளி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட ஆனந்தபுரி பகுதி யில் சிறுவர்கள் இருவர் கிணற்றில்குளிக்கச்சென்ற வேளை உயிரிழந்துள்ள னர் எனப்பொலிஸார் தெரி வித்தனர்.

நேற்று நடந்த இந்தச் சம்பவத்தின் போது உயி ரிழந்தவர்கள் திருகோண மலைதேவநகர்பகுதியைச் சேர்ந்த எல்.ஹேமதரன் (16 வயது) மற்றும் கே. உமாசங்கர் புவிராஜ் (15 வயது) ஆகியோர் ஆவர்.

நண்பர்களானஇவர்கள் இருவரும் பொதுக்கிணறு ஒன்றில் குளித்துக் கொண் டிருந்த வேளை கிணற்றுக் குள் பாய்ந்து விளையாடி யுள்ளனர். பக்கம் 18 »

## வவுனியா சுகாதாரத் தொண்டர்கள் நேற்று ஊர்வலம், உண்ணாவிரதம்




வவுனியா,ஓக.12

வடமாகாண சுகாதார தொண்டர்கள் நிரந்தர நிய மனம்கோரிமேற்கொண்டு வரும் போராட்டம் நேற்று 100 ஆவது நாளை எட்டி யுள்ளது. இவ்வாறான நிலையிலேயே தமது நிரந் தர நியமனம் தொடர்பில் கவனம் செலுத்தக் கோரி அடையாள உண்ணா விர தப் போராட்டத்தில் ஈடுபட் டுள்ளனர்.

வவுனியா பிராந்திய சுகாதார நிலையம் முன் னால் பக்கம் 18 »

## 'கோட்டா'வுக்கு எதிரான வழக்கு மீண்டும் விசாரணைக்கு!


கொழும்பு, ஓக.12

முன்னாள்பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ உட்பட 8 பேருக்கு எதிராக இலஞ் சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழு, கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளவழக்குநேற்று விசாரணைக்கு எடுக்கப் பட்டது.

அவன்கார்ட் மெரி டைம் சர்விஸ் நிறுவனம் அதிக இலாபம் கிடைக்கும் வகையில் மிதக்கும் ஆயு தக் களஞ்சியம் ஒன்றை நடத்துவதற்கு இடமளித் தன் பக்கம் 18 »

## பொலிஸ்காரரின் மோ.சைக்கிள் வவுனியாவில் நேற்று அபேஸ்!

### சி.சி.ரி.வி. கமராவில் காட்சிப் பதிவு




வவுனியா, ஓக.12

வவுனியா, குருமன் காடு சந்திப் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பொலிஸார் ஒருவரின் மோட்டார் சைக்கிள் திருட் டுப்போயுள்ளது. அந்த மோட்டார் சைக்கிளை நபர் ஒருவர் கொண்டு செல்லும் காட்சியும் சி.சி. ரி.வி. கமராவில் பதிவாகி யுள்ளது.

நேற்று மதியம் 1.28 மணியளவில்இடம்பெற்ற இச்சம்பவம்பற்றிமேலும் தெரிய வருவ தாவது –

வவுனியா,குருமன்காடு சந்திப் பகுதியில் அமைந் துள்ள கடை ஒன்றுக்கு பக்கம் 18 »

### அளப்பு அருணாசலம்



உது எங்கட வழமை யான பல்லவிதான் பாருங்கோ...!

## உலக சைவ இளைஞர் மாநாடு எழுச்சிப் பேரணியுடன் ஆரம்பம்

### யாழ்.நகரில் நேற்றுப் பேரிகை முழக்கம்

யாழ்ப்பாணம், ஓக.12

அகில இலங்கை சைவ மகா சபையின் ஏற்பாட்டில் உலக சைவ இளைஞர் மாநாடு நேற்று யாழ்ப்பா ணத்தில் ஆன்மீக எழுச்சிப் பேரணியுடன் ஆரம்பமா னது. இந்த மாநாடு இன் றும் நாளையும் இடம் பெறவுள்ளது. பக்கம் 18 »



## சமுர்த்தி உதவி நீக்கப்படமாட்டாது ஜனாதிபதி நேற்று உறுதிமொழி

### மக்கள் போராட்டங்களுக்கு கிடைத்த வெற்றி

கொழும்பு, ஓக.12

ஏற்கனவே சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கப்படு பவர்களுக்கு அது நீக்கப் படமாட்டாது என ஜனாதி பதிமைத்திரிபால சிறிசேன நேற்று உறுதியளித்தார்.

சமுர்த்தி மீளாய்வின் போது பாதிக்கப்பட்ட மக்கள் நாடெங்கும் போராட்டங் களைமுன்னெடுத்து வந்த துடன், அந்த மக்களுக்கு ஆதரவாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சியும் நேற்றுக் காலை நாடாளுமன்றில் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

சமுர்த்தி உதவி நிறுத் தப்படமாட்டாதுஎன்றஉறுதி மொழியை அரசாங்கம் பக்கம் 18 »

# பிணைமுறி விவகாரம்; பதவி விலகுவதால் பிரச்சினை தீராது!

## அனுர எம்.பி. சீற்றம்



கொழும்பு, ஓக.12

ரவிகருணாநாயக்க அமைச்சுப் பதவியில் இருந்து விலகுவதால் மட்டும் பிணை முறி தொடர்பான பிரச்சினைகள் தீராது என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தொடரும் பிணைமுறி பிரச்சினைகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழுவால் அமைச்சர் ரவி கருணாநாயக்க மீதான குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சியங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயத்தில் தம்மை நல்லாட்சி என அடையாளப் படுத்தி ஆட்சிசெய்யும் இந்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.-என்றார். (எ)

# உயர் கல்விக்கான கடன்கள்; நாட்டுக்குச் சிறந்த முதலீடு!

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 12

உயர்கல்விக்கான கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது எதிர்காலத்தில் வளமான இலங்கையைத் தோற்றுவிப்பதற்கான முதலீடாக அமையும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவித்துள்ளார்.

ஹோமாகம தியகம பிரதேசத்தில் நிறுவப்பட்ட தொழில் நுட்ப நிறுவனத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார். 'அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மொரட்டுவப் பல்கலைக் கழகத்துக்காக ஹோமாகம தியகம பிரதேசத் தில் நிறுவப்பட்ட இந்த நிறுவனம் ஆயிரத்து 250 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாணவர்களுக்கும் 13 வருட அடிப்படைக் கல்வி கட்டாயமாக்கப்பட வுள்ளது. இந்தக் காலப் பகுதியில் இறுதி இரண்டு வருடங்களில் சகல மாண வர்களுக்கும் கனிணிகளை வழங்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.

தொழில் கல்வியை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும். NDT தொழில் நுட்ப நிறுவகத்தில் உயர்கல்வி தொடரும் மாணவர்கள் பொறியியல் பட்டத்தைப் பெறுவதற்கான அமைப்பைத் தோற்றுவிப்பதும் இங்கு அவசியமாகும்.-என்றார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல உரையாற்றுகையில்-

'பல்கலைக்கழகங்கள் சுயாதீனமாக இயங்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்த உள்ளோம். அரச, தனியார் பல்கலைக் கழகங்களின் தரத்தைப் பேணுவது தொடர்பான சட்டமூலம் வகுக்கப்பட்டுள்ளது. இது விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்'.-என்றார்.

## இளவாலை வடக்கு கிராம அபிவிருத்தி சங்க கட்டடத் திறப்பு விழா

இளவாலை, ஓக. 12

இளவாலை வடக்குக் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவும் இரண்டாம் மொழிக் கற்கை நெறிக்கான சான்றிதழ் வழங்கலும் பொதுக் கூட்டமும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இளவாலை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் தலைவர் சி.குமாரலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.வடக்குப் பிரதேச செயலாளர் ச.சிவசிறி, கௌரவ விருந்தினராக சைவப்புலவர்சு.செல்லத்துரை, சிறப்பு விருந்தினர்களாக வலி.வடக்குக்கிராமஅபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.பரணிகரன், தெல்லிப்பழை கலாசார மத்திய நிலைய பொறுப்பதிகாரி ம.பத்மாதேவமலர், இளவாலை வடக்கு கிராம சேவையாளர் பேனாட் சாள்ஸ் மரின் ஜெனிற்ரா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ)

## சாவகச்சேரியில் யோகா பயிற்சி நெறி நாளை ஆரம்பம்

சாவகச்சேரி, ஓக. 12

தென்மராட்சி பிரதேச கலாசார அதிகாரசபையின் ஏற்பாட்டில் யோகாசன பயிற்சி நெறி நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் பி.ப. 3.30 - 5.30 மணி வரை தென்மராட்சிக்கலைமன்றத்தில் (சிவன் கோவில் வீதி, சாவகச்சேரி) நடைபெறும் எனப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ)

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் ஆனைவிழுந்தானில் முற்றுகை!



புத்தளம், ஓக.12

ஆனைவிழுந்தான் பறவைகள் சரணாலயத்தில் சட்டவிரோதமாக இயங்கிய கசிப்பு உற்பத்தி செய்யும் இடம் முந்தல் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்டத்தின் ஆராச்சிக்கட்டு பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த சரணாலயத்தில் இரகசியமான முறையில் கசிப்பு தயாரிக்கப்படுகின்றது என முந்தல் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து நேற்று முன்தினம் அந்தப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டது.

இதன்போது, 250 கசிப்பு போத்தல்கள், 16 பரல்கள், 5 எரிவாயு சிலிண்டர்கள், 2 அடுப்புகள், மோட்டார் சைக் கிள் ஒன்று, சீனி 150 கிலோ கிராம் மற்றும் கசிப்பு வடி உபகரணங்கள் 4 என்பன மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும், கசிப்பு தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என்பதால் எவரும் கைது செய்யப்படவில்லை. கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முந்தல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## சின்மயா மிஷனில் இன்று அருளுரை

நல்லூர், ஓக.12

நல்லூர் உற்சவத்தை யொட்டி பருத்தித்துறைவீதி, இலக்கம் 700 என்ற முகவரியில் உள்ள யாழ்ப்பாணம் சின்மயா மிஷனில் ஆன்மீக அருளுரை நிகழ்வு இடம்பெற்று வருகிறது.

நாளாந்தம் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகள் மாலை 7.30 மணி முதல் 8 மணிவரை அருளுரை வழங்குவார்.

இன்றைய தலைப்பு: 'தீவிர வேட்கை?'

## நல்லூரில் இன்று நாடகத் திருவிழாவில் இரு நாடகங்கள்

நல்லூர் பெரும் திருவிழாக் காலத்தில் செயல்திறன் அரங்க இயக்கம் நடத்தும் 'நாடகத்திரு விழா' எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும்.

இந்த நாடகத் திருவிழா நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள பண்டாரக்குளத்தின் முன்பாகவுள்ள பஞ்சபூத அரங்கிலே நடைபெறும். இதில் தே.தேவானந்தின் 'இது கூத்தல்ல நிஜம்' (விழிப்புணர்வு நாடகம்) இன்று சனிக்கிழமை இரவு 7 மணிமுதல் 7.45 மணி வரையும், நாட்டார் வழக்கியற் கழகத்தின் "அரிச்சந்திர மயான காண்டம்" (இசை நாடகம்) இரவு 8.30 மணி முதல் 9.30 மணி வரையும் இடம்பெறவுள்ளன.




யாழ்ப்பாணம், ஓக.12

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று சனிக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் பாட்டு: அ.அமிர்தலோஜனன், அ.அமிர்சிந்துஜன், வயலின்: கா.குகபரன், மிருதங்கம்:க.கஜன், கெஞ்சிரா: நா.சிவசுந்தரசர்மா, கடம்:ந.மாதவன், முகர்சிங்:சி.செந்தூரன்.

***

நல்லூர் உற்சவத்தில் உலக சைவத் திருச்சபை இலங்கை நடத்திவரும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் மாலை 6.45 மணிமுதல் 7.45 மணிவரை நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இன்று சைவப்புலவர் சைவநெறி சன்மார்க்கர் ஏ.அனுசாந்தன் 'நாலாயிரம் கண் படைத்திலனே' என்னும் தலைப்பில் ஆன்மீக உரையாற்றுவார். (இ)

## நல்லூர் சங்கிலியன் பூங்காவில் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஓக.12

'யாழ்.முயற்சியாளர் - 2017' எனும் விற்பனைக் கண்காட்சி நேற்று வெள்ளிக்கிழமை நல்லூர் முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள சங்கிலியன் பூங்கா வளாகத்தில் ஆரம்பமானது. இந்தக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை 5 மணி வரை இடம்பெறும். (ச)

# ரவியின் ராஜினாமா தண்டனை அல்ல; சட்ட நடவழிக்கைதான் முக்கியம்!

## வலியுறுத்துகிறார் ஜே.வி.பி. தலைவர்



கொழும்பு, ஓக.12

ரவிகருணாநாயக்க தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்தமை அவர் செய்த மோசடிகளுக்குக்கிடைத்ததண்டனை அல்ல. அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை உடன்எடுக்கவேண்டும்.

– இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஊழல் சட்டத்தின் கீழும் நிதி மோசடிசட்டத்தின்கீழும்அவருக்கு எதிராகநடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

“எவராவது ஒருவர் தவறிழைக் கும்போது அவர் அணிந்திருந்த ஆடையைக்கழற்றிவிட்டு வேறு ஓர் ஆடையை அணிந்து கொண் டவுடன் அவர் குற்றமற்றவராக மாறிவிடுவதில்லை.

மோசடிகளில் பங்கெடுத்துக் கொண்டபோது நிதி அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்க,வெளிவிவகார அமைச்சராக மாறியவுடன் குற்றமற்றவராக மாறுவதில்லை.

அவர் மீது பல குற்றச்சாட்டுகளைச் சுமத்தும்படியான விடயங்கள், ஜனாதிபதி ஆணைக்குழு மூலம் வெளியாகியுள்ளன. எனவே, அவருக்கு எதிராக உடனடியாகச் சட்டத்தை நடை முறைப்படுத்த வேண்டும்.

ரவி கருணாநாயக்கவை முன்னுதாரணமாக எடுக்குமாறு அரசு கூறுகின்றது. நாம் நாட்டு பிள்ளைகளுக்கும், பொதுமக்களுக்கும் கூறுகின்றோம் அவரை முன்னுதாரணமாக எடுக்க வேண்டாம் என்று.

களவு செய்துவிட்டும், நம்பிக்கையில்லாப்பிரேரணைகொண்டுவர முயற்சிக்கும் போதும் பதவியை இராஜினாமா செய்வது சிறந்த அரசின் இலட்சணமல்ல” என்றார். (இ)

# மாகாண சபைகளின் தேர்தல் தொடர்பான ஐ.தே.க. தீர்மானத்தை சு.க. ஆதரிக்காது

## சு.க. இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தகவல்

கொழும்பு, ஓக.12

கிழக்கு மாகாண சபை உட்பட சில மாகாண சபைகளின் கால எல்லையை நீடித்து ஒரே தினத்தில் 9 மாகாண சபைகளுக்குமான தேர்தலை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி எடுத்துள்ள தீர்மானத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரிக்காது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த கட்சியின் மத்திய செயற்குழு இந்த முடிவை எடுத்துள்ளது என புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியசெயற்குழுக்கூட்டம்அந்த கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனதலைமையில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை இரவு நடைபெற்றது.

இதன்போது மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து இராஜாங்க அமைச்சர்ஹிஸ்புல்லாஹ்வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

கிழக்கு மாகாண சபை உட்பட 9 மாகாண சபைகளினதும் கால எல்லையைநீடித்து ஒரேநேரத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தல் அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப்பட்டிருந்தது.

இந்த விடயம் சம்பந்தமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதன்போது, கிழக்கு மாகாண சபை உள்ளிட்ட சில மாகாண சபைகளின் கால எல்லையை நீடிப்பதற்கு எந்தக் காரணம் கொண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரிக்கப் போவதில்லை என்ற தெளிவான தீர்மானம் எடுக்கப்பட்டது.

சு.க. மத்திய செயற்குழு எடுத்த இந்தத் தீர்மானம் தொடர்பில் ஐ.தே.க. தலைவரும், பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவிடம் தெளிவுபடுத்தவுள்ளது.

அதிகார துஷ்பிரயோகம் மேற்கொள்கின்ற, ஊழல் நிறைந்த கிழக்கு மாகாண சபையை அதன் கால எல்லையை நிறைவடையும் போது கலைத்து விடுவது என்றும், எந்தக் காரணம் கொண்டும் அதற்கு கால நீடிப்பு வழங்குவதில்லை என்றும் இதன்போது தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தத் தீர்மானமானது பல மணிநேரகலந்துரையாடல்களுக்கு பின்னரே எடுக்கப்பட்டது. ஆகவே, கிழக்கு மாகாண சபையானது உரிய நேரத்தில் கலைக்கப்படும்.

இது தொடர்பில் பிரதமர் முன்வைத்துள்ள சட்டமூலம் நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரும் போது அதனை எதிர்த்து வாக்களித்து தோற்கடிப்பதற்கான சகல நடவடிக்கையினையும் மேற்கொள்ளும் என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

நல்லாட்சி அரசின் பங்காளியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் ஆணைக்கு எதிராகவோ, ஜனநாயகத்துக்கு எதிராகவோ ஒருபோதும் செயற்பட மாட்டாது.

எனவே, கிழக்கு மாகாண சபையை தெரிவு செய்த மக்கள் தமது ஆணையை மீறி மேலதிகமாக ஒரு நாளைக் கூட வழங்க மாட்டார்கள். இதற்கு ஒருபோதும் சு.க. ஆதரவாக இருக்காது. –என்று அவர் தெரிவித்தார். (ம)

# தப்பிச்சென்ற இராணுவத்தினருக்கு பாதுகாப்பு வழங்குவது குற்றம்

## படைத் தலைமையகம் அறிவித்தது

கொழும்பு, ஓக.12

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்கள் அல்லது விடுமுறை பெறாமல் கடமைக்குச் சமுகமளிக்காமல் இருப்பவர்கள் போன்ற இராணுவத்தினருக்கு பாதுகாப்பு வழங்குவது தண்டனைக்குரிய குற்றமாகும் என இராணுவ தலைமையகம் அறிவித்துள்ளது.

இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவது மற்றும் அவர்களுக்குப் புகலிடம் கொடுப்பது நாட்டின் சட்டத்திற்கு அமைய நீதிமன்றத்தில் தண்டனை வழங்கக்கூடிய குற்றம் எனவும் இராணுவ தலைமையகம் கூறியுள்ளது.

இராணுவத்தில் இருந்து 40 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் தப்பியோடியுள்ளனர் எனக் கூறப்படுகிறது. இவர்களில் சில ஆயிரம் பேர் சட்டரீதியாக இராணுவத்தில் இருந்து விலகியுள்ளனர் என இராணுவத் தரப்பு ஏற்கனவே அறிவித்திருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

# வவுனியாவில் வாளுடன் நின்ற குடும்பஸ்தர் ஒருவர் கைது

வவுனியா தேக்கவத்தைப் பகுதியில்வாளுடன்நின்றஒருவர் வவுனியாபொலிஸாரால்கைதுசெய்யப்பட்டுள்ளார். நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அந்த நபருக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள ரவுடிக் கும்பல்களுடன்தொடர்புஉள்ளதாஎன்ற கோணத்தில் பொலிஸ் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தேக்கவத்தை 12 ஆம் ஒழுங்கையில் வசிக்கும் 25 வயதுடைய, இரும்பு வேலை செய்யும் குடும்பஸ்தரே இவ்வாறு சந்தேகத்தில்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரது வீட்டில் சோதனைகள் இடம்பெற்றபோது வில்லுத் தகடுகள் மீட்கப்பட்டுள்ளதுடன் 21.5 அங்குளமுடைய வாளொன்றும் மீட்கப்பட்டுள்ளது. இவர் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவிற்குச்சென்றுதங்கிநின்று தொழில்செய்தவர் என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை, வவுனியா வைரவபுளியங்குளம் பகுதியில் நேற்று இரு மாணவர் குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் ஒரு மாணவனுக்கு சிறிய காயம் ஏற்பட்டுள்ளது.

சிறிய கத்தி ஒன்றினால் ஒரு மாணவன் மற்றைய மாணவனை வெட்டினார். சம்பவத்தில் காயமடைந்தவர் சிகிச்சைகாக வவுனியாபொதுவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம)

# இன்று தொடக்கம் நாட்டில் மழை

கொழும்பு,ஓக.12

இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நாட்டின் பல பாகங்களிலும் மழை பெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு, பொலன்னறுவை, அநுராதபுரம், ஆகிய மாவட்டங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சியை எதிர்பார்க்கலாம்.

ஊவா, மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் 75 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியை எதிர்பார்க்கமுடியுமெனவானிலை அவதான நிலையம் மேலும் தெரிவித்தது. (ம)

# கனடாவில் காப்புறுதி பெறவே வரணியில் திருட்டு நாடகம்

## உண்மை அம்பலமானது

வரணி, ஓக.12

கனடாவில் காப்புறுதிப் பணத்தைப் பெறுவதற்காகவே வரணியில் திருட்டு நாடகம் ஆடப்பட்டது எனக் கண்டறியப்பட்டுள்ளது. கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளிலேயே உண்மை நிலைவரம் தெரியவந்தது.

கடந்த 7ஆம் திகதி திங்கட்கிழமை வரணிப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் இரவு 8 மணியளவில் நுழைந்த திருடர்கள் சுமார் 51 இலட்சம் பெறுமதியான 81 பவுண் தங்க நகை களைக் கொள்ளையிட்டுச் சென்றனர் என கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

மேற்படிச் சம்பவத்தின்போது வீட்டில் இருவர் இருந்தனர் எனவும் எனினும், கனடாவில் இருந்து வந்த பெண்ணின் நகைகளே திருடப்பட்டன எனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த முறைப்பாடு தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஐ.பீ.எதிரிசிங்க தலைமையில் தொடர் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த முறைப்பாடு தொடர்பான விடயம் ஊடகங்களில் வெளிவந்ததைத் தொடர்ந்து, அது தொடர்பாக உடன் விசாரணைகளை நடத்துமாறு உயர் மட்டத்தில் இருந்து பொலிஸாருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது எனக் கூறப்படுகின்றது.

விசாரணைகளின் போது 6 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டன. விசாரணைகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்ட நிலையிலேயே மேற்படி உண்மை கண்டறியப்பட்டுள்ளது. விசாரணை அறிக்கை எதிர்வரும் 16ஆம் திகதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளது. இதன்போது பொய் முறைப்பாடு வழங்கியவர்களையும் நீதிமன்றில் ஆஜராகு மாறும் கொடிகாமம் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயல். வெளிநாடுகளில் இருந்து வருகின்றவர்கள் இவ்வாறு பொய் முறைப்பாட்டைப் பதிவு செய்து காப்புறுதிப் பணத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கக்கூடாது. அவ்வாறான வர்களுக்கு எதிராக நீதிமன்ற அறிவுறுத்தலுக்கு அமைய கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ம)

# பாலர் பாடசாலைகளின் கலை விழா இன்று

மானிப்பாய், ஓக. 12

மானிப்பாய் ‘பட்டர்பிளை’, பண்டத்தரிப்பு ‘புளூமிங் படஸ்’ ஆகிய ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலைகளின் கலை விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு, பண்டத்தரிப்பு, பிரான்பற்று அருளமுதீஸ்வரி கல்யாண மண்டபத்தில் பாடசாலை தலைவர் த.சிவகுமார் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகவடக்கு மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள், திணைக்கள ஆணையாளர் தி.விஸ்வரூபன் திருமதி மங்கையர்க்கரசி விஸ்வரூபன் தம்பதியரும் கலந்துகொள்வர். (இ)




பன்னிருகரத்தோனே பச்சைமயில் வாகனனே
உன்னருள்வேண்டி அனுதினமும் துதிக்கின்றோம்
முன்செய் முதுவினைகள் மூண்டதுவோ முருகையா
நன்மைகள் பொலிந்திட அருள் நல்லூரின் நாயகனே!

- செல்வவேலாயுதம்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பரிதாபத்துக்குரியதாகுமா சம்பந்தன், சுமந்திரன் நிலை?

புதிய அரசமைப்பை உருவாக்கும் விவகாரம் மேலும் இழுபட்டுப் போகும் சூழ்நிலை தென்படுகின்றது.

கடந்த வருடம் நடுப்பகுதியில் வெளியாகும் என அறிவிக்கப்பட்ட புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையை இன்னமும் வெளியிட முடியாமல் தடுமாறுகின்றது அரசமைப்பு வடிவமைப்புக்கான வழிகாட்டல் குழு.

கடைசியாக இந்த ஓகஸ்டில் அது வெளியாகும் என வழங்கப்பட்ட உறுதிமொழியும் கூட காற்றில் பறந்து விடும் என்ற நிலைமை ஏற்பட்டிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

இடைக்கால அறிக்கையை வெளியிடுவதற்கான எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியாகி விட்டன. சுமார் எழுபதுதடவைகளுக்கு மேல் கூடியுள்ள வழிகாட்டல் குழு, தனது இடைக்கால அறிக்கைக்கான நகலை எப்பவோ தயாரித்து முடித்து விட்டது.

ஆனால், அதை வெளியில் விடமுடியாது முட்டுக்கட்டை போட்டு வைத்திருக்கின்றது சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தரப்பு.

இந்த இடைக்கால அறிக்கையில் இடம்பெற வேண்டிய தங்கள் தரப்பு ஆலோசனைகள் சிலவற்றைத் தாங்கள் எழுத்து வடிவத்தில் தருவார்கள் என சுதந்திரக் கட்சிப் பிரதிநிதிகள் தெளிவாகக் கூறியிருக்கின்றனர்.

புதிய அரசமைப்பு ஏற்பாடுகள் சில தொடர்பில், சு.கவின் கருத்தையும் இணைத்து இடைக்கால அறிக்கையை வெளியிடுவது என வழிகாட்டல் குழு தீர்மானித்தது. அதற்காக சு.க. பிரதிநிதிகளுக்கு இரண்டு வார கால அவகாசம் வழங்கவும் முடிவாயிற்று.

கடைசியாக இரண்டு வார கால அவகாசம் முடிந்தும் விட்டது. அதற்குப் பின்னர் இந்த வாரத்தில் வழிகாட்டல் குழு மீண்டும் இரண்டு தடவைகள் கூடிய போதிலும் சு.க. தரப்பினர் தமது யோசனைத் திட்டம் குறித்து அறிக்கை எதனையும் சமர்ப்பிக்கவில்லை. எப்போது சமர்ப்பிப்போம் என்றோ, அல்லது சமர்ப்பிக்க விரும்பவில்லை என்றோ கூட சு.க. தரப்புப் பிரதிநிதிகளிடமிருந்து தெளிவான பதில் வரவில்லை எனத் தெரிகின்றது.

ஒன்றும் செய்ய முடியாத நிலையில் வழிகாட்டல் குழுவின் கூட்டத்தைத் தள்ளிப் போட்டிருக்கின்றார் அதன் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

வழிகாட்டல் குழுவின் கூட்டங்களை இடைவிடாது நடத்தி, சளைக்காமல் முயற்சியைக் கொண்டு நகர்த்திய அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூட இப்போது களைத்துப் போய்விட்டார் எனத் தெரிகின்றது.

இது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நீங்கள் பேசுங்கள், சு.க நிலைப்பாடு குறித்து தெளிவானதும், திட்டவட்டமானதும், வெளிப்படையானதுமான ஒரு முடிவை வெளிப்படுத்துமாறு சு.கவின் தலைவரான அவரைக் கேட்டு வற்புறுத்துங்கள் என்று கூட்டமைப்புத் தலைமையைப் பார்த்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்திருக்கின்றார் என்றும் தெரிகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அவசர அவசரமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டிருப்பதற்கான பிரதான காரணங்களுள் இதுவும் ஒன்று.

ஆகப்பிந்தி, இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கை வந்திருந்த சமயம் அவரைச் சந்தித்த இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான விடயங்களையும் உள்ளடக்கியதாக புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி மும்முரமாக நடைபெறுவதாகக் கூறியிருந்தனர். இதற்கான இடைக்கால அறிக்கை ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டு தொடர் நடவடிக்கைகள் தாமதமின்றி முன்னெடுக்கப்படவுள்ளன என இருவரும் சேர்த்து இந்திய ஜனாதிபதிக்கு உறுதி வழங்கியிருந்தனர் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த விடயத்தில் நல்லாட்சி அரசின் ஆளும் தரப்பு - குறிப்பாக சுதந்திரக் கட்சி - வேண்டுமென்றே காலத்தை இழுத்தடித்து, குழப்பி வருகின்றது என்ற செய்தியை இந்தியத் தரப்புக்கும் எடுத்து விளக்குமாறு கூட்டமைப்பின் தலைமைக்கு சில மட்டங்களில் இருந்து ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது.

அதனால் கூட்டமைப்பின் தலைமை விரைவில் இந்தியத் தரப்பையும் சந்தித்து இது விடயத்தில் தனது ஏமாற்றத்தை - அதிருப்தியை - எரிச்சலை - வெளிப்படுத்தும் என்று தெரியவருகின்றது.

அதிகாரத்தையும் பதவிகளையும் தக்க வைப்பதிலும் அவற்றைப் பறித்தெடுப்பதிலும் தமக்குள் தீவிரமாக மோதிக் கொள்ளத் தொடங்கியிருக்கும் தென்னிலங்கை அரசியல் சக்திகள், புதிய அர சமைப்பு உருவாக்க முயற்சி தங்களின் தற்போதைய அரசியல் போட்டிகளில் தங்களுக்கு இடைஞ்சலான விவகாரமாகக் கருதுகின்றன.

அதனால் அந்த முயற்சிகளை நெட்டித் தள்ளி, ஒதுக்கி தூர வைத்து விட்டு தங்களுடைய அதிகாரப் போட்டி அரசியலை மும்முரமாக முன்நகர்த்துவதில் தீவிரமாக நிற்கின்றன.

இந்தத் தென்னிலங்கை அரசியல் சக்திகளை நம்பி, அவை ஆட்சியைப் பிடிப்பதற்கும் மற்றைய தரப்பை அதிகாரத்தில் இருந்து இறக்குவதற்கும் முழு அளவில் ஒத்துழைப்பு வழங்கி உதவியமையுடன் மட்டுமல்லாமல், அவற்றை நம்பி தமது மக்களிடம் வாக்குறுதியும் நம்பிக்கையும் அளித்த சம்பந்தன், சுமந்திரன் போன்றோரின் நிலைமைதான் இப்போது பரிதாபத்துக்குரியது என்றாகி வருகின்றது.

---

### வரலாற்றில் முதன்முறையாக நாடு முழுவதும்

# பணிப் புறக்கணிப்பில் குதிக்க தயாராகும் கிராம அலுவலர்கள்!

கொழும்பு, ஓக. 12

வரலாற்றில் முதன் முறையாக நாட்டின் ஒட்டு மொத்த 332 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த அனைத்து கிராமசேவையாளர்களும் ஒன்றிணைந்து மாபெரும் பணிப் புறக்கணிப்பில் இறங்குவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

இதுதொடர்பில் அகில இலங்கை கிராமசேவையாளர்களின் சங்கச் செயலாளர் டபிள்யூ. ஜீ. கமல் கித்சிறி தெரிவித்தவை வருமாறு:-

நீண்டகாலமாக தாம் முகங்கொடுத்துவரும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதற்கு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு எவ்வித சிரத்தையும் காட்டாமல் புறக்கணித்து வருகின்றது. இன்னும் இரு வாரங்களில் எங்களது கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைக்கா விட்டால் மேலதிக அறிவித்தல்கள் எவையுமின்றி நாடுதழுவியபணிப்புறக்கணிப்பில் ஈடுபட உள்ளோம்.

இதுவரைகாலமும் கிராம சேவையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பல பணிகள் பிரதேச செயலகங்களிலுள்ள அபிவிருத்தி அதிகாரிகளுக்கு வழங்கியிருப்பதை நிறுத்துதல், கிராமசேவையாளர் சம்பள முரண்பாடுகளைத் தீர்த்தல், அவர்களின் சேவைக்கான சரியான சட்டதிட்டங்களை வடிவமைத்தல் ஆகியவை உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அண்மையில் சமர்ப்பித்துள்ள பிரேரணையின்படி கிராமசேவையாளர்கள் இதுவரைகாலமும் மேற்கொண்டு வந்த 7 பணிகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

அத்துடன், ஜனாதிபதி செயலகம் அறிமுகப்படுத்தியுள்ள உணவுப்பொருள்கள் உற்பத்தி, சுற்றாடல் பாதுகாப்பு, மது மற்றும் போதைப் பொருள்கள் ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, போஷணை அபிவிருத்தி, சிறுவர் பாதுகாப்பு, தேசிய டெங்குஒழிப்புப்பணி, கிராமிய மட்டத்திலான அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் தகவல்களைச் சேகரித்தல், கிராமசேவையாளர் மட்டங்களில் அபிவிருத்திக் குழுக்களைஅமைத்தல்போன்ற விவகாரங்களில் கிராமசேவையாளர்களின் பங்களிப்பு போன்றவை உள் நாட்டு அலுவல்கள் அமைச்சின் பிரேரணையின் படிமட்டுப்படுத்தப்படவுள்ளன.

மேற்கூறிய பிரச்சினைகளுக்கு இன்னும் இரு வாரங்களில் தீர்வு வழங்கப்படா விட்டால் நாங்கள் போராட்டத்தில் இறங்கவுள்ளோம்.- என்றார்.

---

# அரசில் தொடர்ந்து இருப்பது குறித்து விரைவில் தீர்மானம் எடுக்கவுள்ளேன்

### அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு



நல்லாட்சி அரசில் தொடர்ந்தும் இருப்பதா? இல்லையா என்பது தொடர்பில் விரைவாக தீர்மானம் எடுக்கவுள்ளேன் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் செயலாளரும் அமைச் சருமான சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம்இடம்பெற்றஊடகவியலாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நல்லாட்சி அரசின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். அதேசமயம், ஜனநாயகத்தை நிலைநாட்டுவது அரசின் பொறுப்பாகும். நல்லாட்சி அரசுக்குள் பல்வேறு கருத்து முரண்பாடுகள் உள்ளன.

அரச சொத்துக்களை விற்பனை செய்கின்றமை என்ற கொள்கையுடன் இந்த அரசு செயற்பட்டு வருகின்றது. அரச நிறுவனமொன்றை லாபம் ஈட்டுவதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் எடுத்து விட்டு இறுதித் தீர்வாக அதனை குத்தகைக்கு கொடுப்பதை தீர்மானிக்கலாம். ஆனால், அரசு எடுத்த எடுப்பிலேயே விற்பனை செய்யவே பார்க்கின்றது.

இதேவேளை புதிய முறையின் கீழ் தேர்தலை நடத்தும் திருத்தப் பிரேரணை ஒக்ரோபர் அமர்வுகளில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

திருத்தப் பிரேரணை தொடர்பான வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்ற நிலையில், புதிய முறையின் கீழ் தேர்தலை நடத்தும் நோக்கில் பல திருத்தங்கள் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.- என்றார்.

---

### கொழும்பு கறுவாக்காட்டில் அமைந்துள்ள

# கோள் மண்டலத்தைப் புனரமைக்க அனுமதி வழங்கியது அமைச்சரவை

கொழும்பு - 7 கறுவாக்காட்டில்அமைந்துள்ள இலங்கை கோள் மண்டலத்தை புனரமைப்புச் செய்து நவீனமயப்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

விஞ்ஞான, தொழில் நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.1965 ஆம் ஆண்டுக்கு முன்னர் காணப்பட்ட தொழில்நுட்பத்தை மையமாகவைத்துநிர்மாணிக்கப்பட்ட இலங்கை கோள் மண்டலம் இதுவரை எவ்வித நவீன மயப்படுத்தல்களுக்கும் உட்படுத்தப்படவில்லை.

அதனடிப்படையில் புனரமைப்பு நடவடிக்கைகளை துரித கதியில் செயற்படுத்தும் யோசனைகளுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை கோள்மண் டலம் அடிப்படை வானியல் ஆராய்ச்சி, விண்வெளி ஆய்வு மற்றும்இரவு நேர வானம் பற்றிய கல்வி மற் றும் பொழுதுபோக்கு காட்சிகளைக் காட்டுவதற்கு அல்லது விண்வெளி ஆய்வுகள் பற்றிய பயிற்சிகள் என்பவற்றுக்காகஅமைக்கப்பட்டுள்ள பார்வையாளர் அரங்கமாகும்.

அரச எந்திரவியல் கூட்டுத்தாபனத்தால் 1965ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டு, இலங்கை தொழில்நுட்பவியல் கண்காட்சிக்காக நவீன தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தவும், விசேடமாக இரவு வானம் உருவாகும் அமைப்பை காட்சிப் படுத்தவும் 1965ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இதன் கட்டடக் கலைஞர் பேராசிரியர் ஏ.என்.எஸ். குலசிங்ஹ ஆவார்.

---

**ஆரோக்கியமான சூழல் ஆரோக்கியத்தை இரட்டிப்பாக்கும்!**

- கழிவுகளை தரம் பிரித்து அகற்றுவோம்.
- உக்கக்கூடிய கழிவுகளை, சேதனப் பசளை தயாரித்திட வழங்குவோம்.
- பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை மீள் சுழற்சிக்குத் தந்திடுவோம்.
- இலத்திரனியல் கழிவுகளை அவதானத்துடன் அகற்றிடுவோம்.



தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

---

**நாளை**

13.08.2017
ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம் : அச்சுவினி பி.இ 4.41 வரை
திதி : சஷ்டி மு.இ 8.26 வரை

சுபநேரம் : 9.05 - 10.35 வரை
இராகுகாலம் : 4.35 - 6.05 வரை

# யாழில் கடற்படையின் கொமாண்டோக்கள்!



கொழும்பு, ஓக. 12

யாழ். குடாநாட்டில் கடலோரக் காவல்படைக்கு உதவியாக, இலங்கைக் கடற் படையின் சிறப்பு படகுப் படையணி கொமாண்டோக் களும் நடவடிக்கையில் ஈடு படுத்தப்பட்டுள்ளன என்று இலங்கைப் பாதுகாப்பு வட் டாரங்கள் தகவல் வெளி யிட்டுள்ளன.

இதற்கமைய, அண்மையில் பருத்தித்துறைக்கும் மணல் காட்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்ட 9 பேர், கடற்படை கொமாண் டோக்களின் உதவியுடன் கடலோரக் காவல் படையின ரால் கைது செய்யப்பட்டுள் ளனர்.

மண் ஏற்றப்பட்ட நிலை யில் இருந்த உழவு இயந்திரம் ஒன்றும் கைப்பற்றப்பட்டு பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டது.

கைது செய்யப்பட்டவர் கள் பருத்தித்துறை நீதிமன் றத்தில் நிறுத்தப்பட்டு இன்று வரை விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூலை 21ஆம் திகதி வல்லிபுரக் கோவில் பகுதியில் சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்டவர்களைத் தடுக்க முயன்ற கடலோரக் காவல்படையினர் மீது தாக்கு தல் நடத்தப்பட்டது. இதில் கடலோரக் காவல் படையைச் சேர்ந்த ஒருவர் படுகாயம டைந்தார்.

இந்தச்சம்பவத்தைஅடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்று ஆய்வு செய்த கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந் திர விஜேகுணரத்ன, கடலோ ரக் காவல் படையினருக்கு உதவியாக, இலங்கைக் கடற் படை கொமாண்டோக்களை நிறுத்த உத்தரவிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பொலித்தீன் தடைச் சட்டம் விரைவில் அமுலுக்கு வரும்!



## சுற்றாடல் பிரதி அமைச்சர் அனுராதா ஜயரத்ன தெரிவிப்பு

பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்தும் விதமாக கொண்டு வரப்பட்டுள்ள சட்டவிதிகள் கட்டாயமாக அமுல்படுத்தப்படும் என சுற்றாடல் பிரதி அமைச்சர் அனுராதா ஜயரத்ன தெரிவித் துள்ளார்.

கண்டி ஈ.எல்.சேனாநாயக்கா சிறுவர் நூல கத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சுற்றாடலை பாதுகாப் பதற்காக மேற்கொள்ளப் படும் சகல முடிவுகளும் எச்சந்தர்ப்பத்திலேனும் பின்வாங்கும் நிலைக்கு உள்ளாகாது.

சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக அரசுக்கு பல்வேறு தடைகள் உருவான போதும், பொலித்தீன் மற்றும் எஸ்பெஸ்ட்டோஸ் பாவனை தொடர்பாக எவ்வித தளர்வும் வழங் கப்படமாட்டாது.

கடந்த காலங்களில் சுற்றாடல் தொடர்பாக நாம் பல்வேறு முடிவுகளை எடுத்தோம். இருப் பினும் அவை அனைத்தின் பின்னாலும் பெரிய வர்த்தக முதலீட்டாளர்கள் இருந்தனர். அவர்கள் பெரிய முதலீடுகளை மேற்கொண்டி ருந்தனர். இதனால் நாம் எடுத்த முடிவுகளை மீள் பரிசீலிக்க வேண்டி ஏற்பட்டது என்றும் அவர் தெரி வித்துள்ளார்.

# இனப்படுகொலை நடத்த ருவாண்டாவில் நல்லிணக்க முயற்சிகளில் முன்னேற்றம்!

## இலங்கையின் படையினர் திருப்தி

கொழும்பு, ஓக. 12

இனப்படுகொலை நிகழ்ந்த ருவாண்டாவில் நல்லிணக்க முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து இலங்கைப் படையினர் திருப்தி வெளியிட்டுள்ள னர்.

இலங்கையில் இருந்து ருவாண்டா சென்றிருந்த பாதுகாப்புச் சேவையின் அதிகாரிகள் இந்த திருப் தியை வெளியிட்டுள்ளனர்.

கடந்த 1994ஆம் ஆண்டு ருவண்டாவில் இடம்பெற்ற இனப்படு கொலையின் போது 10 லட்சத்துக்கும் மேற்பட் டோர் கொல்லப்பட்டனர்.

எனினும், 23 வருடங் களில் அந்த நாட்டில் நல்லிணக்க முயற்சிகளில் பெரும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

அங்கு படைப்பிரிவு களும்திறமையானபடைப் பிரிவுகளாக மாற்றப்பட் டுள்ளன.

இந்த நிலையில் அவர் கள் நாட்டின் நல்லிணகத் துக்கு பெரிய பணிகளை செய்து வருகின்றனர் என இலங்கைக் குழுவின் தலைவர் கேணல் ஏக்க நாயக்க தெரிவித்துள்ளார்.

எனவே, ருவாண்டா வின் படிப்பினையைக் கொண்டு இலங்கையி லும் நல்லிணக்க முயற்சி களுக்கு படைத்தரப்பினர் உதவமுடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# விபத்தில் ரஷ்ய தம்பதி பலி; சாரதி பொலிஸாரால் கைது!

காலி - மாத்தறை பிரதான வீதியின் மிரிஸ்ஸ பிரதேசத் தில் இடம்பெற்ற வாகன விபத் தில் ரஷ்ய நாட்டைச் சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளனர்.

விபத்துக்குக் காரணமான பஸ் சாரதியை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தனியார் பஸ் ஒன்றும் மோட் டார் சைக்கிள் ஒன்றும் மோதி யதில் ரஷ்ய நாட்டைச் சேர்ந்த இருவரும் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் இடம்பெற்றுள்ளது. ரஷ்ய நாட்டு ஜோடியே விபத் தில் உயிரிழந்துள்ளனர். விபத்தை ஏற்படுத்திவிட்டு விட்டுத் தப்பி சென்ற பஸ் சாரதியை பொலிஸார் விரட் டிப் பிடித்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்த ரஷ்ய நாட்டவர்களின் சடலங்கள் மாத்தறை வைத்தியசாலை யின் பிரேத அறையில் வைக் கப்பட்டுள்ளன என பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அமெரிக்கா – இலங்கை உறவை மேலும் பலப்படுத்த முன் நிற்பேன்!



## பிரசாத் காரியவசம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 12

இலங்கையின் வெளிவிவ காரச் செயலர் பதவியின் மூலம் நாம் அமெரிக்கா மற் றும் இலங்கைக்கு இடை யிலான உறவுகளை மேலும் பலப்படுத்தவுள்ளோம் அதற் காக நான் தொடர்ந்தும் முன் நின்று செயற்படுவேன் என அமெரிக்காவுக்கான இலங் கைத்தூதுவர்பதவியில்இருந்து விலகும் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிற்கான தூது வராகப் பணியாற்றிய பிரசாத் காரியவசம், இலங்கை வெளி விவகார அமைச்சின் செயலா ளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில், வொஷிங் டனில் உள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத் தில் அவருக்கு கடந்த புதன் கிழமை பிரியா விடை அளிக் கும் நிகழ்வு இடம்பெற்றுள் ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய பிர சாத் காரியவசம் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் வெளிவிவ கார செயலாளராக பதவியேற் பது மகிழ்ச்சி தருகிறது.

மேலும், அமெரிக்காவுக் கான தூதுவர் பதவியை விட் டுச் சென்றாலும், அமெரிக்க, இலங்கை உறவுகளுக்கான தூதுவராகத் தொடர்ந்து இருக்க விரும்புகிறேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த பிரியாவிடை நிகழ் வில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான இணைச் செயலர் தோமஸ் சானொன் மற்றும் இலங்கையின் நலன் விரும்பிகள், அமெரிக்க அரச பிரதிநிதிகள், வொஷிங்டனில் உள்ள வெளிநாட்டு இராஜ தந்திரிகள், வர்த்தக பிரமுகர் கள், சிவில் சமூக மற்றும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதி நிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

# எதிர்வரும் நாள்களில் ஷிரந்தி கைதாவாராம்!


கொழும்பு, ஓக. 12

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்‌ஷவின்மனைவி ஷிரந்தி ராஜபக்‌ஷ எதிர்வரும் நாள்களில் கைது செய்யப்பட வுள்ளார் எனச் சிங்கள ஊடக மொன்று செய்தி வெளியிட் டுள்ளது.

அவரை கைது செய்து விளக்க மறியலில் வைக்கும் திட்டங்கள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் 15 ஆம் திகதி ஷிரந்தி ராஜபக்‌ஷ குற்ற விசாரணைத் திணைக் களத்திற்கு அழைக்கப்பட உள்ளார் எனவும், அவ்வேளை அவர்கைதுசெய்யப்படவுள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

ரகர் வீரர் வசீம் தாஜுடீன் கொலை வழக்கு தொடர்பி லேயே அவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். என்று தெரிவிக்கப்படுகிறது.



காலைக்கதிர் Kalaikkathir



# நாட்டில் நடந்து கொண்டிருப்பது வெறும் சொல்லாட்சி மட்டுமே!

### சாடுகிறார் கிழக்கு மாகாணசபை பிரதி அவைத் தலைவர்

மட்டக்களப்பு, ஒக. 12

ஆட்சி அதிகாரங்களைக் கொண்டுள்ளவர்கள் நாட்டில் நல்லாட்சி நடக்கிறது எனப் புகழாரம் சூட்டிக் கொள்கின்றனர். ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இது வெறும் சொல்லாட்சியாகவே உள்ளது.

-இவ்வாறு கிழக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் பிரசன்னா இந்திர குமார் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - மண்முனை மேற்கு பங்குடாவெளி விவேகானந்தா முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை பன்குடாவெளி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில்




கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டுக்கொண்டே இருக்கின்றனர். இதனை மறுப்பதற்கு இல்லை .

நல்லாட்சி எனக் கூறப்படுகின்ற தற்போதைய மத்திய அரசு ஆட்சிக்கு வருவதற்கு ஏதேவொரு வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவாக இருந்தது. கூட்டமைப்பு எதிர்க்கட்சியில் இருந்தாலும் இந்த ஆட்சிக்கு நல்லிணக்கத்துடன் ஒத்துழைப்புகளை வழங்கி வருகிறது. எனினும், தமிழ் மக்கள் எதிர்பார்த்தவாறு நல்லாட்சி அரசின் செயற்பாடுகள் இல்லை.

தமிழ் மக்களைவழிநடத்தும் தமிழ்த் தலைமைகள் எம் மக்களின் கருத்துக்களுக்கும், அபிலாஷைகளுக்கும், மதிப்பளித்து செயற்பட வேண்டும். இல்லாவிட்டால் மக்களுக்கும் தலைமைக்குமிடையில் அரசியல்ரீதியானநீண்டஇடைவெளி ஏற்படுகின்றமை தவிர்க்க முடியாத ஒன்றாகி விடும்.

இதேவேளை, 20 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் ஜனநாயக் கத்துக்கு விரோதமாக பதவிக் காலத்தை நீடிக்க அரசு முற் படுகின்றது. ஆனால், தேர்தல் நடைபெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. தேர்தல் நடைபெறும் போது தமிழ் மக்கள் கருத்து வேறுபாடுகளை மறந்து ஒருமித்துச் செயற்பட வேண்டும்.-என்றார். (ச)




## கிழக்குப் பல்கலை சிங்கள மாணவர்களை வெளியேறுமாறு உத்தரவு!

கிழக்குப்பல்கலைக் கழக வந்தாறு மூலை வளாக நிர்வா கக் கட்டடத்தை முற் றுகையிட்டுள்ள சிங் கள மாண வர் களை உடனடியாக வெளி யேறுமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதி மன்ற பதில் நீதிவான் வி.தியாகேஸ்வரன் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கற்கும் சிங்கள மாணவர்கள், ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில், கடந்த செவ்வாய்க் கிழமை பிற்பகல் அவர்கள் நிர்வாகக் கட்டடத்தை முற்றுகையிட்டனர்.

இதனை அடுத்து, நிர்வாக நடவடிக்கைளுக்கு இடையூறு விளைவிக்கின்றனர் எனக் குற்றஞ்சாட்டி 19 மாணவர்களுக்கு எதிராக ஏறாவூர்ப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்து.

இதன்காரணமாக, பல்கலைக்கழகத்தின் நிர்வாக நடவடிக்கைள் முற்றாகத் தடைப்பட்டன. மேலும், பாதுகாப்பு ஊழியர் ஒருவர் மாணவர்களால் தாக்கப்பட்டார். இதனால், நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சூழல் இல்லையெனக் கூறி, கல்விசாரா ஊழியர்களும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இந்த நிலையில், மேற்படி வழக்கை விசாரணை செய்த நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

## திருமலையில் கஞ்சாவுடன் மூவர் கைது!

திருகோணமலை மாவட்டத்தின் மூன்று வெவ்வேறு இடங்களில் கேரள கஞ்சா விற்பனை செய்து கொண்டிருந்த மூவரைத் திருகோணமலை பிராந்தியப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸார், நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து ஒரு கிலோ 450 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

பாலையூற்றுப் பகுதியில் 26 வயதான குடும்பஸ்தர் ஒருவர் 100 கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டார். இந்த நிலையில், அந்த நபர் பொலிஸாரிடம் அளித்த தகவலின்படி, திருகோணமலை அநுராதபுர சந்தியில் கஞ்சா விற்பனை செய்து கொண்டிருந்த மூதூர் பிரதேசத்தை 24 வயதான இளைஞன் ஒருவர் ஒரு கிலோ 100கிலோ கிராம் கஞ்சா வுடனும், ரொட்டி லேன் பகுதியில் கஞ்சா விற்பனை செய்து கொண்டிருந்த 26 வயதான குடும்பஸ்தர் ஒருவர் 250 கிராம் கஞ்சாவுடனும் கைது செய்யப்பட்டனர். (ச)

# அரச சேவை ஆட்சேர்ப்பு விடயத்தில் கிழக்குக்கு மட்டும் தனிச் சட்டமா?

### நாடாளுமன்றில் அப்துல்லா மஹ்ரூப் எம்.பி. கேள்வி

அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும்போது ஏனைய மாகாணங்களில் பின்பற்றப்படாத வயதெல்லை கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் ஏன் பின்பற்றப்படுகின்றது.

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்ரூப் கேள்வியெழுப்பியுள்ளார்.

நேற்றைய நாடாளுமன்ற அமர் வில் கல்வியமைச்சருக்குப் பதிலாக அவரது பதிலை சபைக்குத் தெரிவித்த காணி அமைச்சர் கயந்த கருணாதிலக அரசமைப்பின் 13ஆம் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் பட்டதாரிகளை மாகாண சபைகள் ஆட்சேர்ப்பு செய்வதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனத் தெரிவித்தார்.

இதனை அடுத்து உரையாற்றிய போதே அப்துல்லா மஹ்



ரூப் மேற்படி கேள்வி எழுப்பினார்.

அதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பட்டதாரிகளிடம் கிழக்கு முதல்வர் விண்ணப்பங்களை கோருகின்ற போதிலும், 35 - 45 வயதுக்கு உட்பட்டவர்களின் விண்ணப்பங்களை பொதுச்சேவை ஆணைக்குழு நிராகரிக்கிறது எனக் குறிப்பிட்டார்.

ஏனைய மாகாணங்களில் இந்த விடயம் கருத்திற்கொள்ளப்படாத நிலையில், கிழக்கு பட்டதாரிகளிடம் மாத்திரம் இந்த நடைமுறையைத்திணிக்கின்றமை, கிழக்கு பட்டதாரிகளின் உரிமையை மீறும் செயலாகும்.

மேலும், ஓய்வுபெறும் வயது தற்போது 55 இலிருந்து 60 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் , நியமனக் காலத்தை அதிகரிப்பதில் எவ்வித பிரச்சினையும் இல்லை.

எனவே கிழக்கு மாகாணப் பட்டதாரிகள் தொடர்பில் கல்வி அமைச்சின் ஊடாக ஜனாதிபதியும் பிரதமரும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். -என்றார். (ச)

# ‘யாவருக்கும் புகலிடம்’ வீட்டுத் திட்டம்: ஆலையடிவேம்பில் பயனாளிகள் தேர்வு!

மட்டக்களப்பு, ஒக. 12

‘யாவருக்கும் புகலிடம்’ எனும் தொனிப்பொருளில் அமைந்துள்ள அரசின் வீடமைப்புத் திட்டங்கள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன் ஓர் அங்கமாக மானிய அடிப்படையிலான காணி மற்றும் வீட்டுத் திட்டங்களை வழங்கி மாதிரி கிராமங்களை அமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் பயனாளிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கை ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.ஜெகதீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நேர்முகத்தேர்வில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் உதவி முகாமையாளர் ஏ.யோகராணி, உதவி பொறியியலாளர் எம்.ஏ.கால்டீன்





பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சசீந்திரன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் என்.சுதர்சன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கமைவாக, வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாசவின் எண்ணக்கருவில் உருவான இந்தத் திட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்படுகின்றவர்களுக்கு மானியமாகக் காணியும் வீட்டை அமைப்பதற்காக வீடமைப்பு அதிகார சபையினூடாக 5 லட்சம் ரூபா பணமும் வழங்கப்பட உள்ளன.

இதன்மூலம் 25 வீடுகளை உள்ளடக்கிய மாதிரி கிராமம் ஒன்றை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாக அமைந்துள்ளது.

இதற்கமைவாக இடம்பெற்ற நேர்முகத் தேர்வில் 75 குடும்பத் தலைவர்கள் பங்கேற்றனர். அவர்களில் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 25 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மஹிந்த ஆட்சி ஊழல்கள் குறித்து விசாரிக்க ஆர்வம் காட்டாத சட்டமா அதிபர் திணைக்களம்



ராஜித குற்றஞ்சாட்டுகிறார்

கொழும்பு, ஓக. 12

மஹிந்த ராஜபக்ஷ அரசின் ஆட்சிக் காலத்தில் இடம் பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு சட்ட மா அதிபர் திணைக்களம் முனைப்புக் காட்டுவதில்லை என அமைச்சர் ராஜித சேனாரத்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த அரசின் அமைச்சர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதில் காட்டும் தீவிரம், கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மோசடிகள் தொடர்பான விசாரணைகளில் சட்ட மா அதிபர் திணைக்களம் காட்டுவதில்லை.

விசாரணைகளில் அரசு எவ்வித தலையீடுகளையும் செய்வதில்லை. கடந்த கால ஊழல் மோசடிகள் தொடர்பான ஆவணங்களை சட்ட மா அதிபர் திணைக்களம் நீண்ட காலம் முடக்கி வைத்திருக்கின்றமை தொடர்பில் கேள்வி எழுகின்றது.

இந்தக் கேள்வியை நாம் எழுப்பி வருகின்றோம். இந்த அரசின் பிழைகள் பற்றி விசாரணை செய்வது நல்லதே, எனினும் கடந்த அரசின் பிழைகள் பற்றி விசாரணை நடத்தப்படுவதில்லையே? அதில்தான் பிரச்சினை உள்ளது.

புதிய முறைப்பாடுகள் பற்றி துரித கதியில் விசாரணை நடத்தப்படுகின்றது.

ஹிருனிகா பிரேமசந்திர, இளைஞர் ஒருவரை கடத்தினார் எனக் குற்றம் சுமத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் 9 நாள்களில் சட்ட மா அதிபர் திணைக்களம் அறிக்கை சமர்ப்பித்தது.

சதுர சேனாநாயக்க தொடர்பான முறைப்பாடு ஒன்று தொடர்பில் 3 நாள்களில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த வேகமும் ஆர்வமும் மஹிந்த அரசின் ஆட்சிக் கால ஊழல் மோசடிகள் குற்றச் செயல்கள் தொடர்பில் சட்ட மா அதிபர் திணைக்களம் காட்டுவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பதில் வெளிவிவகார அமைச்சராக திலக் மாரப்பன நியமிக்கப்படுவாரா?



கொழும்பு, ஓக. 12

வெளிவிவகார அமைச்சர் பதவியில் இருந்து ரவி கருணாநாயக்க நேற்றுமுன்தினம் விலகியமையை அடுத்து, பதில் வெளிவிவகார அமைச்சராக திலக் மாரப்பன நியமிக்கப்படலாம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் ஊகங்கள் நிலவுகின்றன.

ரவி கருணாநாயக்கவின் பதவி விலகலை அடுத்து வெளிவிவகார அமைச்சர் பதவி வெற்றிடமாக உள்ளது. புதிய வெளிவிவகார அமைச்சர் நியமிக்கப்படும் வரையில், இந்த அமைச்சை ஜனாதிபதியே கவனித்துக் கொள்வார்.

அதேவேளை, பதில் வெளிவிவகார அமைச்சராக திலக் மாரப்பன நிய மிக்கப்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன எனக்கூறப்படுகிறது.

புதிய வெளிவிவகார அமைச்சர் பதவிக்கு கலாநிதி சரத் அமுனுகமவின் பெயரும் அடிப்பட்டது. எனினும், திலக் மாரப் பனவுக்கே அந்தப் பதவி வழங்கப்படலாம் என்று தற்போது கூறப்படுகிறது.

## சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்திற்கு கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அழைப்பில்லை!

கொழும்பு, ஓக. 12

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்திற்கு, கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் அழைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும், சுதந்திரக் கட்சியின் ஐந்து மத்திய செயற்குழு உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற் குழுவின் உப தலைவராவேன். பவித்ரா வன்னியாரச்சி, சீ.பி. ரட்நாயக்க, மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் ஜனக பண்டார தென்னக்கோன் ஆகியோர் சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப் பினர்களாவர்.

மத்திய செயற்குழு கூட்டங்களின்போது எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும், நேற்றைய கூட்டத்தில் எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

இது குறித்து அறிந்து கொள்ள கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்கவை தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சித்தேன் முடியவில்லை.



பின்னர் குறுஞ்செய்தி ஒன்றை அனுப்பி வைத்தேன். அதற்கும் பதில் கிடைக்கவில்லை.

மத்திய செயற்குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்காது எடுக்கப்படும் தீர்மானங்களின் அங்கீகாரம் தொடர்பில் பிரச்சினை காணப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ரவிக்கு மீள அமைச்சுப் பதவி; இன்னும் மூன்று மாதங்களிலாம்!

கொழும்பு, ஓக. 12

இன்னும் மூன்று மாதங்களில் அமைச்சுப் பதவியை வழங்கப்படும் என வாக்குறுதி வழங்கப்பட்ட பின்னரே ரவி கருணாநாயக்க தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக தெரிவித்துள்ளார்.

ரவி கருணாநாயக்கவின் இராஜினாமா தொடர்பில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரமாறு:-

முன்னதாக திலக் மாரப்பன பதவியை இராஜினாமா செய்தார். பின்னர் பின் வாசலால் வந்து அவர் மீண்டும் அமைச்சுப்



பொறுப்பை ஏற்றார்.

தற்போது ரவி கருணாநாயக்க இராஜினாமாச் செய்துள்ளார். அடுத்து இராஜினாமா செய்யும் அமைச்சை ரவி கருணாநாயக்க பொறுப்பேற்பார். இதுவே இவர்களின் நல்லாட்சி.

எல்லாம் நாடகம் இவற்றை இனிமேலும் நம்ப மக்கள் மடையர்கள் அல்லர் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## பைஸர் முஸ்தபாவிற்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை: சமிந்த!

கொழும்பு, ஓக. 12

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபாவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சமிந்த விஜேசிறி நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஊவா மாகாண சபையின் பிரச்சினைகள் சம்பந்தமாக தொடர்ச்சியாக நாடாளுமன்றில் கேள்விகளை எழுப்பி வருகின்றேன்.

ஆனால், பதில்களை வழங்குவதற்கு அமைச்சர் சபைக்கு வருவதில்லை. கேள்வி பதில் நேரத்தின் போது அமைச்சர்கள் சபையில் இருக்க வேண்டும் என்று சபாநாயகர் அறிவுறுத்தியும் அது உரிய வகையில் நடக்கவில்லை.

எனவே, அமைச்சர் பைஸர் முஸ்தபாவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டு வருவதற்குத் தயாராகி வருகின்றேன். இதற்குப் பின்வரிசை எம்.பிக்களும் ஆதரவு வழங்குவார்கள் என்று நம்புகின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

## வரவு - செலவுத் திட்ட அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம்!

### அமைச்சரவை துணைப் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவிப்பு



நாடாளுமன்ற வரவு-செலவுத்திட்ட அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகரித்துள்ளது என நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அமைச்சரும், அமைச்சரவை துணைப்பேச்சாளருமான கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம் பெற்ற அமைச்சரவை மாற்றங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வரவு - செலவு திட்ட செயன்முறை, பொருளாதார கொள்கைகள் மற்றும் நிதியியல் முறைமைகள் தொடர்பில் சுயாதீன மற்றும் பக்கச்சார்பற்ற அறிக்கையொன்றைப் பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட மேலும் பல சேவைகள், வசதிகளை வழங்குவதை பிரதான நோக்கமாகக் கொண்டு நாடாளுமன்ற வரவு - செலவுத் திட்ட அலுவலகம் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

இதற்கான சட்ட மூலத்தைத் தயாரிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 'சத்யஜித்ரே'யின் படம் நாளை இலவசக் காட்சி

யாழ்ப்பாணம், ஓக. 12


யாழ்.பொது நூலக வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு சத்யஜித்ரே நெறியாக்கம் செய்துள்ள 'ஜல்சாஹர்' (சங்கீத அறை 1958) வங்காள மொழி 94 நிமிடப் படம் திரையிடப் படும்.

யாழ்.பொது நூலக குவிமாடச் சிறிய கேட்போர் கூடத்தில் இப்படம் இலவசமாக காட்சிப்படுத்தப்பட வுள்ளது. (இ)

# குப்பையிலும் மின்சாரம்! பணிகள் நேற்று ஆரம்பம்!

குப்பையில் இருந்து மின்சாரத்தை உற்பத்திசெய்யும் இலங்கையின் முதலாவது இரண்டு கருத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று கெரவலபிடியவில் ஆரம்பிக்கப்பட்டன.

கழிவுகளை முறையாக அகற்றாத காரணத்தால் கடந்த காலத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி இருந்தது. இதற்கு



## நிகழ்வு மைத்திரி தலைமையில்

நிலையான தீர்வை வழங்கும் நோக்கிலேயே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குப்பைகளை வளமாக மாற்றி மாற்றுத் துறைக்குப் பயன்படுத்தும் முறை இலங்கையில் இது வரை இடம்பெறவில்லை. கழிவுமுகாமைத்துவத்துக்காக அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப முறைமைகள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்தி சுகாதாரமான முறையிலும், சூழல் நட்புடையதாகவும் கழிவகற்றல் முறைமையை ஏற்படுத்தி கழிவுகளிலிருந்து பெற முடியுமான பயன்களைப் பெற்றுக் கொள்வதற்கு முறையான நிகழ்ச்சித் திட்டம் பெருநகர, மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சால் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

வத்தளை, கெரவலபிட்டிய பிரதேசத்தில் மேற்கொள்ளப் படும் இந்தத் திட்டத்துக்கு கே.சி.ரி. லங்கா ஜேன்ங் நிறுவனமும் வெஸ்டர்ன் பவர் நிறுவனமும் 2 ஆயிரத்து 700 கோடி ரூபாவை முதலீடு செய்துள்ளன.

இந்தத்திட்டம் ஆரம்பிக்கப் பட்டதும் ஒரு நிலையத்திலிருந்து 10 மெகா வோட் மின்சாரம் தேசிய மின்சார முறைமைக்கு பெற்றுக் கொள்ளப் படவுள்ளது. இதனுடன் இணைந்ததாக புத்தளம் அறுவக்காடு பிரதேசத்தில் ஒரு சுகாதார முறைமையிலான கழிவகற்றும் நிலையம் அமைக்கப்படவுள்ளது. எதிர்வரும் 2 வருடங்களில் இந்த நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## தினசரி ராசி பலன் 12.08.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆனித் திங்கள் 28 ஆம் நாள் பஞ்சமித்திதி இரவு 10.56 மணி வரை. பின்னர் ஷஷ்டி. நட்சத்திரம்: உத்தரட்டாதி காலை 6.13 மணி வரை. அதன்மேல் ரேவதி பி.இ. 5.50 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம்: காலை 9.09 மணி முதல் 10.42 மணி வரை. சுபநேரம்: மாலை 3.05 மணி முதல் 4.34 மணி வரை. திவசம் செய்யவேண்டிய திதி: ஆடிமாத தேய்பிறை பஞ்சமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: ரேவதி.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** சஞ்சலமான நாள். மனதில் யோசனை அதிகரிக்கும். குடும்பத்தில் பிணக்குகள் உண்டாகும். உத்தியோகம் பார்க்கும் இடங்களில் கடும் எதிர்ப்புகள் காணப்படும்.

**ரிஷபம் :** நன்மையான நாள். உறவினர், நண்பர்களின் சகாயம் கிடைக்கும். செய்யும் தொழிலில் முன்னேற்றம் உண்டாகும்.

**மிதுனம் :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. எண்ணிய கருமங்கள் தடைதாமதங்களுடன் நிறைவேறும். உதவி செய்வதாகக் கூறியவர்கள் கைவிரித்து விடுவார்கள்.

**கடகம் :** யோகமான நாள். பொன், பொருள் ஆபரண சேர்க்கை உண்டாகும். சிலருக்கு புதுவீடு கட்டும் யோகமும் கட்டிமுடித்த வீட்டில் கிரகப்பிரவேசம் செய்யும் சிறப்பும் உண்டாகும்.

**சிம்மம் :** கவலையான நாள். எதிர்பார்க்கும் காரியங்கள் கடைசி நேரத்தில் தடைப்படும். உத்தியோகத்தர்களுக்கு கஷ்ட, நஷ்டம் ஏற்படும்.

**கன்னி :** சமபலன்கள் காணப்படுகின்றன. வீண் விரயச் செலவுகள் அதிகமாகும். தொழில், வியாபாரம் சுயதொழில் செய்வோர் அரச செயல்களால் பாதிப் படைவார்கள்.

**துலாம் :** இன்பமான நாள். சுயதொழில் முன்னேற்ற மடையும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். வியாபாரத்தில் புதிய முயற்சியால் வருமானம் அதிகரிக்கும்.

**விருச்சிகம் :** அதிஷ்டமான நாள். சிலருக்கு தொழில் வழியால் வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும். பூர்வீக சொத்துகளால் வருமானம் அதிகரிக்கும்.

**தனுசு :** சலனம் மிகுந்த நாள். மனதில் குழப்பம், கவலை அதிகரிக்கும். குடும்பத்தில் கருத்துவேறுபாடுகள் உண்டாகும். வியாபாரம் மந்த நிலையை அடையும்.

**மகரம் :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். பிரிந்திருந்தவர்கள் குடும்பத்தவர்களின் கடும் முயற்சியால் ஒன்றுசேர்வார்கள். தொழிலில் அலைச்சல்கள் அதிகமாகும்.

**கும்பம் :** சுபீட்சமான நாள். பணபலம், மன பலம் அதிகரிக்கும். உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுத் தொடர்பால் நன்மைபெறுவார்கள். படித்து முடித்த மாணவர்களுக்கு திறமைக்குத் தகுந்த வேலை கிடைக்கும்.

**மீனம் :** கீர்த்தியான நாள். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். மாணவர்கள் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்று ஆசிரியர், பெற்றோரின் பாராட்டைப் பெறுவார்கள்.

சந்திராட்டமநாள்: மகம், பூசம், உத்தரம் முதலாம் கால் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# குப்பைகளிலிருந்து மின்சார உற்பத்தி; நாட்டின் எதிர்காலத்தை மாற்றலாம்!

## அமைச்சர் சம்பிக்க நம்பிக்கை



கொழும்பு, ஓக. 12

குப்பைகளின் மூலமாக மின்சாரத்தைப் பெறும் முதலாவது வேலைத்திட்டம் இலங்கையின் எதிர்காலத்தை மாற்றும் நகர்வாக அமையும். 10 ஆண்டுகளுக்கு முன்னர் முன்னெடுக்க வேண்டிய ஒரு நடவடிக்கை இன்று முன்னெடுக்கப்படுகின்றது என்று அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மேல்மாகாணத்தில் குப்பைகளின் மூலமாக மின்சாரத்தை பெற்றுக் கொள்ளும் வேலைத் திட்டம் நேற்று முன்தினம் கரதியான பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பெரிய அபிவிருத்தி மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், குப்பைகளின் மூலமாக மின்சாரத்தைப் பெறும் வேலைத்திட்டம் மிகப்பெரிய வெற்றியல்ல. ஆனாலும் குப்பை பிரச்சினைக்கு தீர்வு காண இது மிகச்சிறந்த வேலைத் திட்டமாகக் கருதப்படுகின்றது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

# மத்திய வங்கியில் கடந்த ஆட்சியில் நடந்த மோசடிகளை ஆராயவும் விசேட ஆணைக்குழு!

## அமைக்கக் கோருகிறார் ஹர்ஷ டி சில்வா



கொழும்பு, ஓக. 12

மத்திய வங்கியில் 2010 - 2015 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற மோசடிகள் உள்ளிட்டவை தொடர்பில் ஆராய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட விசாரணை ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா கோரிக்கை விடுத்தார்.

மஹிந்தவின் ஆட்சியில் மத்திய வங்கி ஆளுநராக இருந்த நிவாட் கப்ரால் மீது இவ்வாறு மோசடி வழக்கு சுமத்தப்பட்டுள்ள நிலையில் அவருக்கு உரிய முறையில் விசாரிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டதா என்றும் அமைச்சர் கேள்வி எழுப்பினார்.

எனவே தவறிழைத்தவர்கள் யாராகவிருந்தாலும் அவர்களை பிடித்து சிறையில் அடைக்கு மாறும் பிரதி அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நாடாளுமன்ற விவாதங்களில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ரவி கருணாநாயக்க பதவி விலகியமையின் மூலம் நாட்டின் ஜனநாயக ஆட்சி வெளிப் பட்டுள்ளது. கடந்த காலத்தில் இவ்வாறான நிலை காணப் படவில்லை.

அன்றைய ஆட்சியில் அமைச்சர் சரத் பொன்சேகா மிருகத்தைப் போல சிறைக்கு இழுத்துச் செல்லப்பட்டார். ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீது ஈவிரக்கமின்றி தாக்குதல் நடத்தப்பட்டது. இதுவே அன்றைய ஜனநாயகம்.

எனினும், இன்றைய நல்லாட்சியில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையாலேயே அமைச்சர்களிடமும் விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுக்கின்றது.-என்றார். (எ)



# சிந்திப்போம் செயற்படுவோம் வெற்றி நிச்சயம்!

**இன்று சர்வதேச இளைஞர்கள் தினமாகும். அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகின்றது**

ஐக்கிய நாடுகள் சபையின் அங் கீகாரப் பிரகாரம் சர்வதேச இளைஞர் தினம் ஆண்டுதோறும் ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி கொண்டாப்படுகின்றது. இளைஞர்கள் ஒரு நாட்டின் நிர்ணய சந்ததிகள். இளைஞர்களை ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தலாம். அதேநேரம், அழிவுபூர்வமாகவும் பயன்படுத்தலாம். பொதுவாக ஒரு நாட்டின் சொத்துக்களாகக் கருதப்படும் இளைஞர்களை நெறிப்படுத்தி அவர்களை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி சௌபாக்கியமான எதிர்காலமொன்றுக்கு வழிகாட்டுவதும் அவர்களது உணர்வுகளை சிறந்த முறையில் நெறிப்படுத்துவதும், நம்பிக்கை உணர்வையும், வெற்றி மனப்பாங்கையும் ஏற்படுத்துவதுடன், இளைஞர்களின் செயற்பாடுகளை கௌரவித்து மதிப்பளிப்பதும் இத்தினத்தின் முக்கிய நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது.

1998 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை லிஸ்பன் நகரில் நடைபெற்ற உலக நாடுகளின் இளைஞர் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் குழு சர்வதேச ரீதியில் இளைஞர்களின் பிரச்சினைகளையும், இளைஞர்களின் செயற்பாடுகளையும் கவனத்திற்கொள்ளும் வகையில் இளைஞர்களுக்கான சர்வதேச தினம் ஒன்றைப் பிரகடனப்படுத்த வேண்டும் என சிபாரிசு செய்தது.

இதன்படி 1999 டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையின் பிரேரணைப்படி சர்வதேச இளைஞர் தினம் கொண்டாடப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய 2000ஆம் ஆண்டு முதல் இத்தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. உலக இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை பிரதானமாக கவனத்தில் ஈர்க்கும் முகமாக உலகளாவிய ரீதியில் அரசுகள், அரச நிறுவனங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் செயல்படவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை தீர்மானத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறாக ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி சர்வதேச ரீதியில் இத்தினம் பிரகடனப்படுத்தப்பட்டாலும்கூட, சர்வதேச தினம் என்பதை விட ஒவ்வொரு நாடுகளும் தேசிய ரீதியில் இத்தினத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து கொண்டாடுவதை அவதானிக்கலாம். உதாரணமாக இந்தியாவில் விவேகானந்த அடிகளாரின் பிறந்த தினத்தை மையமாகக் கொண்டு 1985 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 12 ஆம் திகதி தேசிய இளைஞர் தினமாகக் கொண்டாடப்படுகின்றது.

எவ்வாறாயினும் சர்வதேச ரீதியிலும் சரி, தேசிய ரீதியிலும் சரி, பிரதேச ரீதியிலும் சரி இவ்வாறு கொண்டாடப்படும் விழாக்கள் ஒரே அடிப்படையைக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம். நமது வாழ்க்கையை உடலியல் அடிப்படையில் குழந்தைப் பருவம், இளமை, முதுமை என மூன்று பிரதானப் பிரிவுகளாக வகுக்கலாம்.

குழந்தைப் பருவத்தில் உடலாலும் மனதாலும் நமது தேவைகளை நிறைவு செய்ய மற்றவர்களைச் சார்ந்துள்ளோம். இந்தப் பருவம் ஒவ்வொருவரின் எதிர்கால வாழ்க்கைக்கு மிக முக்கியமானது. நல்ல பழக்கங்கள், துணிச்சல், தன்னம்பிக்கை ஆகியன ஆழ்மனதுக்குள் செலுத்தப்பட வேண்டிய பருவம். சொந்த அனுபவங்கள் இல்லாத பருவம். பாகுபாடு காணத் தெரியாத உழைக்க முடியாத பருவம். விடலைப் பருவம் அல்லது வளரிளம் பருவம் என்பது, மனிதருடைய உடல் மற்றும் உள வளர்ச்சிக் கட்டங்களில் சிறுவருக்கும், வளர்ந்தோருக்கும் இடைப்பட்ட ஒரு மாறுநிலைக் கட்டமாகும். இப் பருவத்துக்கான வயதெல்லை எல்லாப் பண்பாடுகளிலும் ஒரே அளவாகக் கருதப்படுவதில்லை. பல காலமாகவே பருவமடைதல் என்பது விடலைப் பருவத்துடன் தொடர்பு படுத்தப்பட்டு வந்துள்ளது. அண்மைக் காலங்களில் பருவமடைதல் காலம் விடலைப் பருவத்துக்கு முன்னதாகவே தொடங்கி விடலைப் பருவத்துக்கு அப்பாலும் போவதைக் காணக்கூடியதாக உள்ளது.

### விடலைப் பருவம்

உலக சுகாதார நிறுவனம் விடலைப் பருவத்தை 10 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட காலம் என வரையறை செய்துள்ளது. விடலைப் பருவத்துக்கு பின்னர் வரும் பருவம் இளமை ஆகும். பொதுவாக 18- 24 அல்லது 29 வயதுவரை இளமைப் பருவம் எனப்படுகிறது. இவர்களை இளையோர் அல்லது வாலிபர் என்பர்.

பிற பருவத்தினருடன் ஒப்பிடுகையில் இளையோரிடம் குறிப்பிடத்தக்க சில பண்பியல்புகள் உள்ளன. இளைய பருவம் மாற்றத்தை இலகுவில் ஏற்று தன்னை மாற்றியமைத்துக்கொள்ள கூடியது, துணிவுமிக்கது, செயற்பாட்டை முதன்மைப்படுத்துவது. இப்பருவத்தில் பாலியல் கவர்ச்சியும் ஈடுபாடும் அதிகம் இருக்கும். இளையோரை பெரும் சதவீதமாகக் கொண்ட ஒரு சமூகம் வன்முறைப் போக்கு எடுப்பதற்கு கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன என்றும் கூறப்படுகின்றது.

அநேக நாடுகளில் இளையோரே அதிகம் வேலையற்றோராக இருக்கின்றார்கள்.

முதுமை என்பதை 60 இற்கு மேல் எனக் கூறுவதே பொருத்தமாய் இருக்கும். பெரும்பாலும் 60 வருடம் என்பது பணி நிறைவுக்கான வயது. அதன்பின் ஓய்வு என்பது நடைமுறையிலுள்ள அரசவிதி, முதுமையில் பணிபுரிவதில் சக்தியின்மை இருந்தாலும் வாழ்க்கை அனுபவத்தால் இளைய தலைமுறைக்கு வழிகாட்டும் வாய்ப்பு உண்டு.

உலகின் பல முன்னோடி நிறுவனங்களின் தலைமைப் பொறுப்புகளைத் தம் தகுதியால் அலங்கரித்து வருபவர்கள். பணிபுரிய சுய கௌரவம் பார்க்காமல் குடும்பப் பொறுப்புடன் செயற்படும் இளைஞர் பட்டாளம் நம்மிடையே உள்ளது. சிக்கலான கல்வி கற்பதிலே முன்னணியில் நிற்பவர்கள் நம் இளைஞர்கள். தமக்கென தனிப் பாதையை வகுத்துக் கொண்டு, அதில் திறமையுடனும், துணிச்சலுடனும், தன்னம்பிக்கையுடனும் பயணிப்பவர்கள்தான் நம் இளைஞர்கள்.

இவ்விடத்தில் சோக்ரடீஸின் வரலாற்றுடன் இணைந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வருகின்றது. ஓர் இளைஞன் சோக்ரடீஸிடம் வந்து வெற்றிக்கான இரகசியத்தைப் பற்றிக் கேட்டான். அதற்கு சோக்ரடீஸ் மறுநாள் காலை ஆற்றங்கரைக்கு வருமாறு கேட்டுக் கொண்டார். மறுநாள் காலை ஆற்றங்கரையில் இருவரும் சந்தித்துக் கொண்டனர். சோக்ரடீஸ் அந்த இளைஞனை ஆற்றை நோக்கி உள்ளே வரும்படி கேட்டுக் கொண்டார்.

கழுத்தளவு நீர் வரை உள்ளே வந்தவுடன் அந்த இளைஞனை நீரினுள் வைத்து அமுக்கினார். அவன் வெளியே வர முயற்சி செய்தான். ஆனாலும் அவனை அப்படியே அமுக்கியவாறு அவனது முகம் நீல நிறமாக மாறும் வரை வைத்திருந்தார். சற்றுப் பொறுத்து அவனது தலையை நீரினுள்ளிருந்து வெளியே இழுத்தவுடன் அந்த இளைஞன் செய்த முதல் வேலையே தன்னால் இயன்ற அளவு காற்றை மீண்டும் மீண்டும் உள்ளிழுத்தான்.

சோக்ரடீஸ் அவனிடம் நீ நீருக்குள் இருந்த போது நீ எதை அதிகம் விரும்பினாய்? என்று கேட்டார். அந்த இளைஞன் காற்று என்று பதிலளித்தான். சோக்ரடீஸ், வெற்றியின் இரகசியமே அதுதான். நீ எவ்வளவு அதிகமாக காற்றை விரும்பினாயோ அது போன்றே வெற்றியையும் விரும்பினால் உனக்கு அது கிட்டும் என்று சொன்னார். இதைத் தவிர வேறு எந்த இரகசியமும் இல்லை. இந்த உதாரணம் இளைஞர்களின் உணர்வுக்களிக்கப்படும் முக்கியத்துவத்தை படிப்பினையுடன் கூடி எடுத்துக் காட்டுகின்றது. ஒவ்வோர் இளைஞனும் தன்னம்பிக்கையுடன் தனது பணியை முன்னெடுக்கக் கடமைப்பட்டுள்ளான்.

இன்றைய இளைஞர்கள் ஒருவரைப் பின்பற்றும்போது முழுக்க முழுக்க அவராகவே மாறிவிடக்கூடாது. மாறாக, நல்ல குணங்களை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை விவேகானந்தர் அழகாகக் கூறுகிறார். 'ஒரு விதையை நிலத்தில் போடுகிறோம். அதன் வளர்ச்சிக்குத் தேவையான எரு, தண்ணீர் ஆகியவற்றை அளிக்கிறோம்.

அவ்விதை எருவாகவோ, தண்ணீராகவோ மாறாமல் தன் இயல்பிலேயே எடுத்துக்கொண்டு பிரம்மாண்ட மரமாகிறது. அது போல, 'கற்றுக்கொள்ள வேண்டியதை மட்டும் கற்றுக்கொண்டு வாழ்க்கையில் முன்னேற வழி சொல்கிறார்.'

அளவற்ற தன்னம்பிக்கை உடையவர்களாக இருங்கள். நான் இளமையில் அத்தகைய நம்பிக்கை உடையவனாக இருந்தேன். அதுதான் இப்பெரிய காரியங்களைச் செய் யக்கூடிய சக்தியை எனக்களித்து இருக்கிறது. இளமையும், சக்தியும், நம்பிக்கையும் இருக்கும் காலத்தில்தான் உங்கள் எதிர்கால இலட்சியத்தை நீங்கள் முடிவு செய்ய வேண்டும் என்று கூறி தன்னம்பிக்கை ஊட்டுகிறார். உங்களின் மீதும் உங்கள் திறமைகளின் மீதும் உங்களுக்கு உள்ள ஆழமான நம்பிக்கை தான்உங்கள்கனவுகளைநிறைவேற்றும்.

உங்கள் கனவைச் சொல்லும்போது, உங்கள் வார்த்தைகளில் உயிர் துடிப்பு இருக்க வேண்டும். உங்களின் ஆர்வம் கேட்போரைத் தொட வேண்டும். உங் கள் கனவு எதுவாக இருந்தாலும் அதை சாத்தியமில்லாது என்று ஒதுக்க வேண்டாம். சாத்தியமில்லாதது என்று எதுவுமேயில்லை. தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றது. தன்னம் பிக்கையோடு திட்டமிட்டு, விடாமுயற் சியோடு செயல்வடிவம் கொடுக்க வேண்டும்.

வெற்றி பெற்றவர்கள் அனைவரும் மற்றவர்கள் உறங்கிக் கொண்டிருக்கும்போது தாங்கள் மட்டும் விழித்திருந்து உழைத்தவர்களே. சலிப்புக்கு இடங்கொடாமல் கடும் உழைப்பை உணவாக உட்கொண்டவர்கள், ஒளி படைத்த கண், உறுதிகொண்ட நெஞ்சம், களிபடைத்த மொழி, கடுமை கொண்ட தோள், தெளிவு பெற்றமதி என்றெல்லாம் முகமன் கூறிய பாரதியின் வார்த்தைகளை மெய்ப்பிக்க வேண்டும். குறுகிய சிந்தனையில் வாழ்வைக் குலைத்துக் கொள்ளாமல் சமுதாய நோக்கில் சிந்தித்து செயற்பட்டால் இளைஞர்களுக்கு வெற்றி நிச்சயம்.'

இந்தியாவில் எத்தனையோ தலைவர்கள், அறிஞர்கள், சிந்தனையாளர்கள் இருந்திருக்கிறார்கள். அப்படி இருக்க ஓர் ஆன்மீகவாதி இளைஞர்களின்மிகப்பெரிய அடையாளமாக இருந்துள்ளார்.

ஏனெனில், எல்லோரையும்விட இளைஞர்கள் மீது அபரிமிதமான நம்பிக்கை கொண்டிருந்தார். ஆன்மீகத்தோடு சமய சார்பற்ற பார்வையும் கொண்டிருந்த அவருடைய சிந்தனைகளை ஆன்மீகம் கடந்து புரிந்துகொள்ளத் தொடங்கினால், நமது தேசம் இளைஞர்களின் தேசமாக விரைவில் மாறும். ★




தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

## வடகொரிய எல்லையில் சீன கடற்படை போர் பயிற்சி

வடகொரிய எல்லைப் பகுதிகளில் சீனாவின் கடற்படையும் விமானப் படையும் இணைந்து போர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன.

ஐ.நாவின் எச்சரிக்கையை மீறி வடகொரியா அடுத்தடுத்து அணுஆயுத,



ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது. இதன்காரணமாக கொரிய தீபகற்பத்தில் போர்மேகம் சூழ்ந்துள்ளது. வடகொரியாவின் அச்சுறுத்தல்களை சமாளிக்க அமெரிக்க போர்க்கப்பல்கள், போர் விமானங்கள் தென்கொரியாவில் குவிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பின்னணியில் வடகொரிய எல்லைப் பகுதிகளில்சீனகடற்படையும் விமானப் படையும் இணைந்து போர் ஒத்திகை நடத்தி வருகின்றன. 10 போர் விமானங்கள், 12-இற்கும் மேற்பட்ட போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிகள் போர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. இதில் அதிநவீன ஏவுகணைகளும் பயன் படுத்தப்படுகின்றன.

போர் ஒத்திகை காரணமாக சீனாவின் கிழக்குப் பகுதி மஞ்சள் ஆறு, போகோய் வளைகுடா பகுதியில் சரக்கு கப்பல்கள், மீன்பிடி படகுகளுக்கு தடை விதிக் கப்பட்டுள்ளது.

### வடகொரியா புதிய அச்சுறுத்தலை உருவாக்குகிறது:ஜப்பான்

வடகொரியாவின் ஏவுகணை வளர்ச்சி அச்சுறுத்தலின் புதிய நிலை என்று ஜப்பான் கூறியுள்ளது.

இதுகுறித்து ஜப்பானின் பாதுகாப்பு அமைச்சகம் அண்மையில் வெளியிட்ட வருடாந்திர அறிக்கையில், ''ஏவுகணை சோதனையில் வடகொரியாவின் வளர்ச்சி அச்சுறுத்தலின் புதிய நிலையாக உலக நாடுகளிடையே உருவாகியுள்ளது. வடகொரியா தொடர்ந்து தென்கொரியா மற்றும் ஜப்பான் நாடுகளின் கடல்களுக்கு இடையே ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது. குறிப்பாக, கடந்த ஆண்டு முதல் 20இற்கும் மேற்பட்ட ஏவுகணை சோதனைகளை வடகொரியா நடத்தி யுள்ளது என்பது மிகப் பெரிய அச்சுறுத் தல்தான். மேலும் ஏவுகணை சோதனை தொழில் நுட்பத்தில் வடகொரியா மிகவும் முன்னேற்றமடைந்துள்ளது. வடகொரிய அதிபர் கிம் ஜோங் தலை மையில் அந்நாடு முன்னேற்றம் கண்டு வருகிறது'' என்று கூறப்பட்டுள்ளது.

முன்னதாகசர்வதேசசட்டதிட்டங்கள், ஒப்பந்தங்கள், ஐ.நா.வின் விதிகள் எல்லாவற்றையும் மீறி அணுஆயுத சோதனை நடவடிக்கைகளில் வட கொரியா ஈடுபட்டு வருகிறது. அத் துடன் அதிநவீன ஏவுகணை சோத னைகளையும் நடத்தி வருகிறது. குறிப்பாக அமெரிக்காவின் எந்தப் பகுதியையும் தாக்கும் ஏவுகணையை சமீபத்தில் வெற்றிகரமாக சோதனை நடத்தியது.

அதனைத் தொடர்ந்து அமெரிக்கா வடகொரியா மீது புதிய பொருளாதார தடைகளை கொண்டு வந்தது. இதற்கு கடந்த சனிக்கிழமை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் உள்ள 15 நாடுகளும் ஒருமனதாக ஒப்புதல் வழங்கின.

ஐ.நா.வின் புதிய பொருளாதார தடைக்கு வடகொரிய அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன் இந்த பொருளாதாரத் தடையினால் வட கொரியாவின் அணுஆயுத சோதனை நடவடிக்கைகளை தடுக்க முடியாது என அ ந்நாடு தெரிவித்துள்ளது.

### அமெரிக்காவின் புதிய விமானந் தாங்கி போர்க்கப்பல்


பொதுச்சொத்துக்களின் இன்னு மொரு பாரிய விரயமாக, அமெரிக்கா, சுமார் 13 பில்லியன் டாலர் மதிப்பில் அண்மையில் அந்நாட்டின் 11 வது மிகப்பெரிய USS ஜெரால்ட் ஃபோர்ட் போர்க்கப்பலை (USS Gerald Ford) படையில் இணைத்தது.

F&35c போர்விமானங்களுக்குரிய அதன் விமானப்பிரிவுடன் சேர்ந்து இக்கப்பலின் நிகர விலை மதிப்பு,



30 பில்லியன் டொலர் என்பது, ஐக்கிய நாடுகள் சபை மதிப்பீட்டின்படி ஏறத் தாழ உலக பட்டினியைத் தீர்ப்பதற்கான ஓராண்டு செலவுக்குச் சமமாகும்.

படையில் அந்தக் கப்பல் இணைக் கப்படுவதை பார்ப்பதற்காக அங்கே கூடியிருந்த பாதுகாப்புத்துறை ஒப்பந்த செயலதிகாரிகளில் பலர், ஐயத்திற் கிடமின்றி, அவர்களின் சொந்த விமா னங்களையும், கிளப் உறுப்பினர் அந் தஸ்தையும் கொண்டிருப்பார்கள், இவற்றுக்கான தொகை இந்த பிரமாண்ட கொடூரத்திற்காக செலவிடப்பட்ட சுமார் 3 பில்லியன் டொலருக்கும் மேல திகமாகவரவு-செலவுத்திட்டத்திலிருந்து செலுத்தப்பட்டிருக்கும். இத்திட்டத்தை முன் நகர்த்தியதற்காக, அதற்குப் பின்னர் எத்தனை அரசியல்வாதிகளுக்கு தனியார் துறையில் ஏழு-இலக்க சம்பளத்தில் வேலை கிடைத்ததோ? எவருக்கும் தெரியாது.



(கேள்வி தொடரும்)

காலைக்கதிர் Kalaikkathir



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



62




## அத்தியாயம் - V

## இந்திய இராணுவத்தின் வேட்டை

இந்திய – புலிகள் யுத்தம் தொடங்கிய காலத்தில், இன்று கடற்புலிகளின் சிறப்புத் தளபதியாக பணியாற்றும் கேணல் சூசை அன்று வடமராட்சிப் பிரதேசத்துக்குப் பொறுப்பாக இருந்தார். அவர் அடிக்கடி எமது வீட்டுக்கு வந்து செல்வார். வடமராட்சியில் எமது பாதுகாப்பிற்கு அவரே பொறுப்பாகவும் இருந்தார். யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் நிகழும் இராணுவ நடவடிக்கைகள் பற்றியும் வடமராட்சி நோக்கி இந்தியப் படைகள் நகர்வது பற்றியும் சூசையே பாலாவுக்கு கிரமமாக அறிவித்து வந்தார். வடமராட்சிப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் படைபலம் எத்தகையது. இந்திய இராணுவத்தை எதிர்த்து நிற்க எவ்வகையான தற்காப்புப் போர் வடிவத்தை வகுக்க வேண்டும் என்பவை தொடர்பாக இரண்டு பேரும் கலந்துரையாடுவார்கள். விடுதலைப் புலிகளிடம் ஆளணிப் பற்றாக் குறையும், ஆயுதப் பற்றாக்குறையும் இருக்கின்றமையால், முன்னேறிவரும் இந்தியப் படைகளுக்கு எதிராக, பகிரங்கமான மரபுவழிப் போரை நடத்துவது அர்த்தமற்றது என்றும், இதனால் புலிகளுக்கு மோசமான உயிரிழப்புக்கள் ஏற்படலாம் என்றும் பாலா வாதாடினார். வலிகாமம் மீதும் சாவகச்சேரி மீதும் இந்தியப் படைகள் நிகழ்த்திய மிருகத்தனமான தாக்குதல்களைப் பார்க்கும்போது விடுதலைப் புலிகள் மரபுவழித் தற்காப்பு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டால் பலாலியிலும் வல்வெட்டித்துறையிலும் உள்ள தமது படைத் தளங்களில் இருந்து இந்தியர்கள் கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதலை வடமராட்சி மீது நடத்துவார்கள் என நாம் கணிப்பிட்டோம். இதன் விளைவாகப் பெருந்தொகையான பொதுமக்கள் பாதிக்கப்படப் போகிறார்கள் என்பதும் தெளிவாகியது. இது நேர்ந்தால், இறுதியில் வடமராட்சியிலிருந்து புலிகள் பின்வாங்க நிர்ப்பந்திக்கப்படுவர். நின்று நிலைக்கக்கூடிய மாற்று வழிப் போர்த் திட்டத்தை விடுதலைப் புலிகள் கடைப்பிடித்து, பொதுமக்களுக்கு அநாவசியமான பேரழிவுகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதே சாலச் சிறந்தது எனக் கருதினோம். சிறிது காலத்திற்கு முன்னராகவே சிறிலங்கா இராணுவம் வடமராட்சியின் மீது 'ஒப்பரேஷன் லிபரேஷன்' என்ற இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு பெருமளவில் உயிரழிவையும் பொருளிழப்பையும் விளைவித்திருந்தது.

சூட்டோடு சூடாக இன்னொரு பெரிய இராணுவ நடவடிக்கை இடம் பெற்றால் மக்களால் அதைத் தாங்க முடியாது என்றும் கருதினோம். பாலாவின் யதார்த்தக் கருத்துக்களைச் செவிமடுத்த சூசை ஆழமாகச் சிந்தித்தார். அவற்றை ஏற்றுக் கொண்டார். இதனால் பீரங்கி எறிகணைத் தாக்குதலில் இருந்து அந்தப் பிரதேசம் காப்பாற்றப்பட்டது. சூசையும் அவருடைய போராளிகளும் தலைமறைவான கெரில்லாப் படையாக இயங்கி வடமராட்சியில் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு இருந்த காலம் முழுவதும், அதற்குத் தலைவலியாக இருந்தார்கள்.

இந்திய இராணுவம் யாழ்ப்பாணத் தீபகற்பத்துக்கு வந்ததில் இருந்து. அதன் ஒரு பிரிவு, வல்வெட்டித்துறை எல்லையில் உள்ள சிறிலங்கா இராணுவத் தளத்தில் தங்கியிருந்தது. போர் தொடங்கிய பின், அங்கிருந்த இந்திய ஜவான்கள் சிலர் நோட்டம் விடும் காவல் உலா புரிந்தார்களேயன்றி, சிறிலங்கா இராணுவத் தளத்திலிருந்து வெளியே நகர்ந்து வல்வெட்டித்துறையைக் கைப்பற்றும் பெரும் தாக்குதல் முயற்சி எதிலும் ஈடுபடவில்லை. நோட்டமிடும் காவல் உலா ஜவான்கள் மீது கெரில்லாத் தாக்குதல் நடந்த போதெல்லாம் அவர்கள் உடனே தங்கள் தளத்திற்கு பின்வாங்கி விடுவார்கள். இறுதியாக வடமராட்சி மீதான இந்திய இராணுவ நகர்வு நிகழ்ந்தபோது, அந்தப் படைகள் வேறொரு புறத்திலிருந்து, அதாவது யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை நெடுஞ்சாலை வழியாகவே நகரத் தொடங்கியது.

இந்திய இராணுவம் எந்த நேரமும் வடமராட்சிக்கு உள்ளே நுழையலாம் என்ற நிலை ஏற்பட்டதும் அங்கிருந்து பாதுகாப்பான ஒரு பகுதிக்குச் செல்வதே சாலச் சிறந்தது என்று கருதினோம். உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட இந்த நிலையில் எம்மோடு கொண்டு செல்ல என்ன என்ன பொருள்களை எடுத்துக் கொள்வது என்ற கேள்வி என் முன் எழுந்தது. பெருஞ்சுமையோடு அலைவது, சூழ்நிலைக்கு ஒவ்வாது. அதற்கேற்ற வகையில் எனது தெரிவுகளை வரிசைப்படுத்துவதே சிறந்தது என்று உணர்ந்தேன். தேவையில்லாத எவற்றைக் கழிக்க வேண்டும் என்று கவலை கொள்வதிலும் பார்க்க, அத்தியாவசியமாக எதை எதை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை முடிவு செய்வதே நலம் என்று கண்டேன். உடைமைகளால் நிரம்பி வழியும் 'ஹயஸ்' வான் வண்டியை ஒருகணம் பார்வையால் துளாவினேன். முதலில் கைவிடவேண்டியவை புத்தகப் பெட்டிகளே என்பதை உணர்ந்தேன். எம்மிடம் பெருந்தொகை நூல்கள்; பலவகை நூல்கள்; இலண்டனில் இருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்டவை; யாழ்ப்பாணத்துக்கு எம்மோடு அவற்றை எடுத்து வந்திருந்தோம். பல ஆண்டுகளாகச் சேகரித்த அறிவுப் பெட்டகம் இது. ஆனால் விருப்பு வெறுப்புக்கு இதுவல்ல நேரம். மற்றவர்களுக்குப் புத்தகங்களைக் கொடுப்பதும் எளிது. அவற்றை அவர்கள் பாதுகாப்பதும் சுலபம். ஆனால் படித்த குடும்பங்களுக்கே அவற்றைக் கொடுக்க வேண்டியிருந்தது. படிக்காத குடும்பங்களிடம் ஆங்கில நூல்களைப் பகிர்ந்தால், தேடுதல் நடத்தும் இந்திய இராணுவத்தினர் சந்தேகம் கொள்ளவும் தகவல் திரட்டவும் எளிதாகி விடும். இனி சமையல் பாத்திரங்களை ஒப்படைப்பதில் சிரமம் இருக்கவில்லை. உடைகள் என்று வரும்போது, மிகத் தேவையானவற்றை மட்டும் எடுத்துக் கொண்டோம். எனக்கு மிகவும் பிடித்த சில ஆடைகளையும் எடுத்துக் கொண்டேன். எமது உடைகளை இரண்டு பயணப் பைகளில் அடைத்தேன். ஒன்று பாலாவுக்கு மற்றது எனக்கு. நாம் போயடைந்த இடத்தில் மின்சாரம் இல்லை. ஆகவே ரோச் லைற்களையும் (மின்விளக்கு) பற்றறிகளையும் கொண்டு செல்வது அவசியமாகப் பட்டது.எம்மிடமிருந்தமண்ணெண்ணெய் விளக்கையும் கொண்டு செல்லத் தீர்மானித்தேன். சில மெழுகுவர்த்திகளையும் தீப்பெட்டிகளையும் கூட, தேவைப் படக்கூடும் என்ற நினைப்பில் பையில் பொதித்தேன். பின்னர் அவை பெரும் உதவி புரிந்தன. மிஞ்சிக் கிடந்தவற்றை பெட்டிகளில் அடைத்து, வெவ்வேறு வீடுகளில் ஒப்படைத்தேன். இந்தச் சுத்திகரிப்பு முயற்சியின் பயனாக வாழ்க்கையில் நான் சேர்த்து வைத்திருந்த ஐந்தில் நான்கு பாகப் பொருள்கள் என்னைவிட்டுப் போயின. ஒன்றே ஒன்றை விட்டுப் பிரிவது கடினமாக இருந்தது. எனது நிழற்பட அல்பம். எனது பிள்ளைப்பருவ பள்ளிப்படங்கள், திருமணப் படங்கள், குடும்பப் படங்கள், இவை அங்கிய நினைவு மீட்டும் படங்கள் - பிளாஸ்ரிக் பக்கங்களில் ஒட்டப்பட்டிருந்தன. போராளி ஒருவர் அந்த அல்பத்தை எடுத்துக் கொண்டுபோய் இருட்டிய பின் நிலத்தைத் தோண்டி அதில் புதைத்தார். தேடப்படும் அதன் சொந்தக்காரரைப் பற்றிய தடயம் எல்லாமே அங்கு புதைக்கப்பட்டன. அவை தப்பிப் பிழைக்கும் என்று எனக்கு ஒரு நப்பாசை! அது நிராசையாகவே முடிந்தது. இரண்டு ஆண்டுகள் கழிந்து, நான் வடமராட்சிக்குத் திரும்பி, புதைத்த இடத்தில் இருந்து நிழற்பட அல்பத்தை தோண்டி எடுத்தபோது படங்கள் உருக்குலைந்து பழுதாகி இருந்தன. பிளாஸ்டிக் உறையூடாக பூஞ்சணம் பிடித்த முகங்கள் அழிபட்டிருந்தன. எனது கடந்த காலத்தை பறிகொடுத்த இழப்புநிலை உணர்வே தலைதூக்கியது.

இந்தியப் படைகள் நிகழ்த்திய மிருகத்தனமான தாக்குதல்களைப் பார்க்கும்போது விடுதலைப் புலிகள் மரபுவழித் தற்காப்பு இராணுவ நடவடிக்கைகளை மேற் கொண்டால் பலாலியிலும் வல்வெட்டித்துறையிலும் உள்ள தமது படைத் தளங்களில் இருந்து இந்தியர்கள் கண் மூடித்தனமான பீரங்கித் தாக்குதலை வடமராட்சி மீது நடத்துவார்கள் என நாம் கணிப்பிட்டோம். இதன் விளைவாகப் பெருந்தொகையான பொதுமக்கள் பாதிக்கப்படப் போகிறார்கள் என்பதும் தெளிவாகியது.

பிரதான வீதிகளில் இருந்தும் கரையோரப் பகுதிகளில் இருந்தும் விலகி வடமராட்சியின் நடுப்பகுதிக்குள் நகர்வதே எமக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்று கருதினோம். வடமராட்சியில் உள்ள ஒடுக்கமான ஒழுங்கைகள் பாய்ப் பின்னல் போல, தனித்துவம் வாய்ந்தவை. எங்கே நாம் தங்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் விடயத்தில் அந்த ஒழுங்கை அமைப்பு வாய்ப்பான ஒன்றாகக் கருதப்பட்டது. இது பாலாவுக்கு நியாயமாகப்பட்டது; பிடித்தமாகவும் இருந்தது. அவரும் அவருடைய குடும்பமும் நண்பர்களும் வடமராட்சியின் இந்தப் பகுதியிலே வாழ்ந்தனர். சிறுவனாக இருக்கும் போது இந்தப் பகுதியிலேயே அவர் மகிழ்ச்சியாக விளையாடித் திரிந்திருக்கிறார். இந்தப் பகுதியின் மூலை முடுக்குகள் அவருக்கு நன்கு தெரிந்தும் இருந்தது. இந்தப் பகுதியில் வாழ்வது என்பது பாலாவுக்கு இளமைப் பருவத்துக்கு மீளச் செல்வது போல இருந்தது.

வல்வெட்டித்துறையில் இருந்து நாம் வெளியேறியதும் இந்தியப் படைகள் அங்கே காவல் சாவடிகள், சோதனைச் சாவடிகள் ஆகியவற்றை நிறுவி, தங்கள் நிலைகளைப் பலப்படுத்திக் கொண்டன. அதன் பின்னர் தங்கள் ஆக்கிரமிப்பை அவர்கள் படிப்படியாக விரிவாக்கி நகரத்தையும் பிரதான வீதிகளையும் தங்கள் கட்டப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள். (தொடரும்...)

## பிரான்ஸ் மண்ணில்
# மூதூர் படுகொலையின் 11 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு

இலங்கை இராணுவத்தால் 04.08.2006 அன்று மூதூரில் படுகொலைசெய்யப்பட்டபட்டினிக்கு எதிரான அமைப்பைச் சேர்ந்த 17 பணியாளர்களின் 11 ஆவது ஆண்டுநினைவுவணக்க நிகழ்வு கடந்த 4 ஆம் திகதி பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு,பிரான்ஸ் கிளிச்சி பிராங்கோ தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிச்சிப் பகுதியில் அந்தப் பணியாளர்கள் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிக்கு முன்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரை கிளிச்சி பிராங்கோ தமிழ்ச் சங்கப் பொறுப்பாளர் குமணன் ஏற்றிவைக்க ஈகச்சுடரை பட்டினிக்கு எதிரான அமைப்பின் மூதூரில் 17 பணியாளர்களுடன் பணியாற்றிய முன்னாள் பணியாளர் ஜெயகாந்த் ஏற்றி வைத்தார்.

மலர்வணக்கத்தை Mairie de Clichy நகர பிதா உதவி Mme Viviane DIECO செலுத்தினார். தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் மலர்வணக்கம் செலுத்தினர்.

தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட 17 பணியாளர்கள் தொடர்பான நினைவுரைகள் இடம்பெற்றன. (எ)








## ரொறன்ரோவில் நடைபெற்ற
# ஐந்தாவது உலகக் கிண்ண பூப்பந்தாட்டப் போட்டிகள்

உலகத் தமிழர் பூப்பந்தாட்டப் பேரவையின் 5 ஆவது உலகக் கிண்ணப்போட்டிகள் இவ்வருடம் கனடா நாட்டிலே ரொறன்ரோ நகரிலே கடந்த 29,30 ஆம் திகதிகளில் மிகச் சிறப்பாக நடந்தேறியுள்ளது. WTBF இன் கனேடியப் போட்டிகளுக்கான உலகக் கிண்ண நிர்வாகக்குழு மிக நேர்த்தியாக செயலாற்றியுள்ளது.

இந்த உலகக் கிண்ணப் போட்டிகள் 13 வயதுக்குட்பட்டோர் தொடக்கம் 60 வயதிற்கு மேற்பட்டோர் வரையில் ஆண், பெண் இருபாலாரையும் உள்ளடக்கியதாக 25 பிரிவுகளில் நடைபெற்றிருந்தன.

போட்டிகள் யாவும் மிகமிக இறுக்கமான போட்டிகளாக அமைந்திருந்தன. இவ்வருடம் புதிதாக அமெரிக்கா, ஆஸ்திரேலியா, போர்த்துக்கல், பின்லாந்து ஆகிய 4 நாடுகளிலிருந்தும் மிகத் தரமான போட்டியாளர்கள் பங்கு கொண்டு போட்டிகளை மிகத்தரமான ஒரு நிலைக்கு இட்டுச் சென்றிருந்தார்கள்.

வயது வரம்பின்றி நடைபெற்ற WTBF போட்டிகளுக்கு பணப்பரிசுத்தொகையும் வழங்கி ஊக்குவிக்கப்பட்டதுடன் இந்தப் போட்டிகள் சிறப்பாக நடந்தேற பல அனுசரணையாளர்கள் தங்களின் பெரிய பங்காற்றலையும் வழங்கி உதவியிருந்தார்கள்.

மேலும் இந்தப் போட்டிக்கு சிறப்பு விருந்தினர்களாக ஜேர்மன் நாட்டின் ஹம்பேர்க் மாநில முன்னைநாள் பொருளாதார





மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் இயன் கரன், கனடா நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி, நகரசபை உறுப்பினர்களான லோகன், கணபதி, நீதன், சாண் ஆகியோர் கலந்து பெருமை சேர்த்திருந்தார்கள்.

15 இற்கு மேற்பட்ட நாடுகளிலிருந்து 200 இற்கு மேற்பட்ட போட்டியாளர்கள் ஆயிரத்துக்கு மேற்பட்ட பார்வையாளர்கள் இணைந்து கொண்டிருந்தார்கள். (எ)



## பிரான்ஸில் நடைபெற்ற
# 'நிழலாடும் நினைவுகள்' நூல் வெளியீடு

புலம்பெயர்ந்து பிரான்ஸ் மண்ணில் இரு தசாப்தங்களுக்கு மேலாக வாழ்ந்து வரும் யோகச்சந்திரன் ஒரு வளர்ந்து வரும் ஆற்றல் நிறைந்த எழுத்தாளர். இவர் தனது இரண்டாவது நூல் வெளியீட்டைப் பாக பிரான்ஸில் நடைபெற்ற நூல்வெளியீடு 'நிழலாடும் நினைவுகள்' என்ற புத்தகத்தின் வெளியீட்டு நிகழ்வை கடந்த 5 ஆம் திகதி பிரான்ஸின் புறநகர் பகுதியில் ஒன்றான வில்பரி பிரதேசத்தில் அமைந்துள்ள மண்டபத்தில் நடத்தியிருந்தார்.

நூலுக்கான மதிப்புரையை நடத்திய மூத்த கவிஞரும், எழுத்தாளரும், கதை ஆசிரியருமாகிய வண்ணை தெய்வம் நெறிப்படுத்த அகவணக்கத்துடன் நிகழ்வு ஆரம்பமாகியது. இந்த நூலில் அடக்கப்பட்ட கதையும் உள்ளடக்கப்பட்ட அம்சங்கள் பற்றியும் வண்ணை தெய்வம் தொகுத்து கூறியிருந்தார்.

எழுத்தாளாரின் வாழ்வில் தனது கண்முன்னே பல்வேறு சமூக அடக்குமுறைக் கலாசாரத்தில் வாழ்ந்து அரைநூற்றாண்டு மேலாக சந்தோசமாக தம்பதிகளாக வாழ்ந்து வரும் ஒரு மூத்த குடும்பத்தினர் நூலை வெளியிட்டு வைக்க எழுத்தாளரின் நண்பர்கள் அதனைப் பெற்றுக் கொண்டனர்.

இறுதியில் விருந்தோம்பலுடன் நிகழ்வு இனிதேநிறைவு பெற்றது.

யோகச்சந்திரன் பிரான்ஸின் 93 தமிழர் விளையாட்டுக்கழகங்களின்முன்னைநாள்தலைவராகவும், தற்போது ஆலோசகராகவும் இருந்து வருகின்றார் என்பதும் இவரின் மூத்த புதல்வன் பிரான்ஸின் தேசிய கூடைப்பந்தாட்டத்தின் சிறந்த நடுவரில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ)



காலைக்கதிர்
Kalaikkathir



# குடிதண்ணீர் நெருக்கடியில் கெங்காதரன் குடியிருப்பு மக்கள்!

அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பில் இரு குடி தண்ணீர்த் திட்டங்கள் மூலம் குடி தண்ணீர் வழங்கப்பட்ட போதிலும் ஒரு குடிதண்ணீர்த் திட்டத்துக்கான கிணற்றில் நீர் வற்றியதன் காரணமாக கெங்காதரன் குடியிருப்பு மக்கள் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

அக்கராயனில் குடிதண்ணீர் நெருக்கடி மிகுந்த கிராமங்களில் ஒன்றாக கெங்காதரன் குடியிருப்பு விளங்கிய நிலையில் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் தொடர்ந்து குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

கரைச்சி பிரதேச சபையால் அந்தக்கிராமத்தில் உருவாக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டத்தை வட மாகாண முதலமைச்சர் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் ஆரம்பித்து வைத்த நிலையில் அந்தக்குடி தண்ணீர்த் திட்டத்தின் கிணற்றில் நீர் வற்றியதன் காரணமாக செயல் இழந்துள்ளது.

இந்நிலையில் அக்கராயன் மத்தி, கிழக்குப் பகுதிகளுக்கு டிராக்டருடன் கூடிய நீர்த் தாங்கி மூலம் இடம்பெற்று வருகின்ற குடி தண்ணீர் வழங்கலை கெங்காதரன் குடியிருப்புக்கும் மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அக்கராயன் அணைக் கட்டு வீதிக் குடும்பங்களும் கரைச்சி பிரதேச செயலகம் அக்கராயனில் நடைமுறைப் படுத்தி வருகின்ற குடி தண்ணீர் வழங்கல் மூலம் தங்களுக்கும் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# பூநகரியில் சிமெந்து ஆலை நிறுவுவதற்கு பரிசோதனை



## வயல் நிலங்கள் உவராக மாறும் ஆபத்து குற்றஞ்சாட்டுகின்றார் அமைச்சர் அனந்தி

யாழ்ப்பாணம், ஓக. 12

பூநகரி பகுதியில் சிமெந்து தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கான ஆய்வுகளால், வயல் நிலங்கள் உவராக மாறி வருகின்றன என வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாணசபையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற அமர்வின் போதே இவ்வாறு தெரிவித்த அனந்தி மேலும் கூறியமை வருமாறு :-

‘பூநகரி பொன்னவழி விநாயகர் ஆலயத்திற்கு அருகில் வெளிநாட்டுநிறுவனம் ஒன்று சிமெந்து தொழிற்சாலையை நிறுவ ஆய்வுகளைமேற்கொண்டு வருகின்றது. அந்த ஆய்வுகளுக்காக நிலங்களில் பெரிய துளையிட்டு பெரிய இயந்திரங்களைப் பொருத்தி நீரை இறைக்கின்றார்கள். அவ்வாறு இறைக்கப்படும் உவர் நீரை அந்தப்பகுதி வயல் நிலங்களில் பாய்ச்சுகின்றார்கள். அதனால் வயல் நிலங்கள் உவராக மாறக் கூடிய சாத்தியங்கள் உள்ளன. இதனால் வயல் நிலங்கள் விளைச்சலுக்கு ஏற்ற நிலம் இல்லாமல் போய்விடும். எனவே அதனை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும்’ என்றார்.

அது தொடர்பில் மற்றுமொரு மாகாண சபை ஆளும் கட்சி உறுப்பினரான அரியரட்ணம் தெரிவிக்கையில்-

‘இந்த விடயம் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பேசப் பட்டது. அது தொடர்பில் ஆய்வுகளைமேற்கொள்ள சக மாகாண சபை உறுப்பினரான பசுபதிப்பிள்ளை தலைமையில் குழு உருவாக்கப்பட்டுள்ளது. நான் அந்த இடத்துக்குச் சென்று பார்த்தேன். அது டோக்கியோசிமெந்து நிறுவனம் மத்திய அரசிடம் அனுமதி பெற்று அந்தப் பகுதியில் சிமெந்து தயாரிக்கக் கூடிய கற்கள் உள்ளனவா என்பது தொடர்பில் பரிசோதனைகளை மேற் கொண்டது.

தற்போது பரிசோதனைகளை முடித்துக் கொண்டு சென்று விட்டார்கள். பரிசோதனை அறிக்கையின் பிரகாரமே அவர்கள் முடிவெடுப்பார்கள். அந்த இடத்தில் கற்களை அகழ்வதா இல்லையா என அதற்கு இடையில் அடுத்த கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடப்படும்’ என்று தெரிவித்தார்.

அதனை அடுத்து கருத்து தெரிவித்த எதிர்க் கட்சிஉறுப்பினர்வை.தவநாதன்-,

‘கடந்த ஆட்சிக் காலத்தில் சிமெந்து உற்பத்தி நிறுவனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த சிலர்தற்போது அதற்கு ஆதரவாகச் செயற்படத் தொடங்கியுள்ளார்கள். அவர்கள் தற்போது அவ்வாறு செயற்படக்காரணம் கையூட்டு பெற்று விட்டார்களா என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது’ என்று தெரிவித்தார். (எ)

# குடியிருப்புகளுக்கு அருகில் குண்டுகள் செயலிழக்க வைப்பு

## விசனம் தெரிவிக்கும் கிளிநொச்சி மக்கள்



கிளிநொச்சி, ஓக. 12

கிளிநொச்சியில் மக்கள் செறிந்து வாழும் குடியிருப்புக்களுக்கு அருகில் குண்டுகளைச் செயலிழக்க வைக்கும் இராணுவத்தினரின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி, உமையாள் புரம் மற்றும் தட்டுவன்கொட்டி, ஆனையிறவு ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் குடியிருப்பு காணிகளிலேயே இந்தச் செயற்பாடுகளை இராணுவத்தினர் முன்னெடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2 மாதங்களாக அந்தப் பகுதியில் இவ்வாறு குண்டுகள் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுகின்றன என்றும் இதனால் தாம் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றோம் என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் குடியிருப்புக்கள் அமைந்துள்ளபகுதியிலிருந்து 250 மீற்றர் தொலைவில் இவ்வாறான செயற்பாடுகள் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வெடிபொருள்களின் சிதைவுகள் குடியிருப்புக்களை அண்மித்த பகுதிகளில்வந்துவீழ்கின்றன என்றும், அதனால் தமக்கு ஆபத்துக்கள் ஏற்படலாம் என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்வாறு செயலிழக்கச் செய்யும் வெடி பொருள்களை மக்கள் குடியிருப்புக்களுக்கு அருகில் மேற்கொள்ளாது, பொருத்தமான பகுதிகளுக்கு மாற்ற வேண்டும் என்று மக்கள் தெரிவிக்கின்றனர். (எ)

# 95 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா விளையாட்டப் போட்டி முடிவுகள்

95 ஆவது சர்வதேச கூட்டுறவுதின விழாவையொட்டி யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையால் நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன.

ஓட்டப்போட்டியில் வெற்றி பெற்றவர்கள் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்கள் வரிசைக் கிரமத்தில் கீழே தரப்பட்டுள்ளன.

100மீற்றர் ஆண்(18-35)எம்.மோகன்ராஜ் (இணுவில் அபிராமி சி.க.கூ. சங்கம்), எஸ்.சுதர்சன் (இணுவில் அபிராமி சி.க.கூ.சங்கம்), ஆர்.அஜிந்த் (வடமராட்சி கிழக்கு ப.தெ.வ.அ.கூ. சங்கம்).

100 மீற்றர் பெண் (18-35 வயது) சி.கஸ்தூரி (ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயக ஐ.நா.சங்கம்), சி.டனுஷிகா (வட்டுக்கோட்டை கால்நடை வளர். கூ.சங்கம்), ம.சுபாங்கி (தெல்லிப்பழை துர்க்காபுரம் சி.க.கூ.சங்கம்).

100 மீற்றர் ஆண் (36 - 50 வயது) த.கமலநாதன் (காரைநகர் ப.தெ.வ.அ. கூ.சங்கம்), நா.சிவகுமார் (வலிகாமம் ப.தெ.வ.கூ.சங்கம்), கோ.கௌரிதாசன் (யாழ்.மா.சி.க.கூ.சமாசம்).

100 மீற்றர் பெண் (36-50வயது) ப.மதிவதனி (நவாலி முருகானந்தா சி.க.கூ.சங்கம்), பு.புவனலோசனி (நவாலி முருகானந்தாசி.க.கூ.சங்கம்), இ.கீதாஞ்சலி (ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயக ஐ.நா.சங்கம்).

100 மீற்றர் ஆண் (50 வயதுக்கு மேல்) ந.விஜயரத்தினம் (ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயக ஐ.நா.சங்கம்), இ.புவனேஸ்வரன் (வலிகாமம் ப.தெ. வ.கூ.சங்கம். கொத்தணி), தி.தயாகுணம் (ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயக ஐ.நா.சங்கம்).

100 மீற்றர் பெண் (50 வயதுக்கு மேல்) ந.செல்வமணி (நவாலி முருகானந்தா சி.க.கூ.சங்கம்), தெ.தேவநாயகி (ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயக ஐ.நா.சங்கம்), த.ஆயிலியம் (ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயக ஐ.நா.சங்கம்).

200 மீற்றர் ஆண் (18 - 35 வயது) மோகன்ராஜ் (இணுவில் அபிராமி சி.க.கூ.சங்கம்), எம்.மதுசன் (வடமராட்சி கிழக்கு ப.தெ.வ.அ.கூ.சங்கம்).

200 மீற்றர் மீற்றர் பெண் (18 - 35வயது) ம.கவிராஜ் (வடமராட்சி கிழக்கு ப.தெ.வ.அ.கூ.சங்கம்), சி.கஸ்தூரி (ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயக ஐ.நா.சங்கம்), த. நிரோஜனா (நீர்வேலி ஸ்ரீ முருகன் சி.க.கூ.சங்கம்), கி.யசிந்தா (நீர்வேலி ஸ்ரீ முருகன் சி.க.கூ.சங்கம்).

200 மீற்றர் ஆண் (36 -50 வயது) கமலநாதன் (காரைநகர் ப.தெ.வ.கூ. சங்கம்), எஸ்.சிவறஞ்சித் (ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயக ஐ.நா.சங்கம்) கோ.கௌரிதாசன் (யாழ்.மா.சி.க.கூ. சமாசம்).

200 மீற்றர் பெண் (36-50 வயது) பா.கௌரீஸ்வரி (நீர்வேலி ஸ்ரீ முருகன் சி.க.கூ.சங்கம்), பா.கலாவதி (தெல்லிப்பழை துர்க்காபுரம் சி.க.கூ. சங்கம்), ப.மதிவதனி (நவாலி முருகானந்தா சி.க.கூ.சங்கம்).

200 மீற்றர் ஆண் (50 வயதுக்கு மேல்) ந.விஜயரத்தினம் (ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயக ஐ.நா. சங்கம்), இ.புவனேஸ்வரன் (வலிகாமம் ப.தெ.வ.கூ.சங்.கொத்தணி), தி.தயாகுணம் (ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயக ஐ.நா.சங்கம்).

200 மீற்றர் பெண் (50 வயதுக்கு மேல்) தெ.தேவநாயகி (ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயக ஐ.நா.சங்கம்), ந.செல்வமணி (நவாலி முருகானந்தா சி.க.கூ.சங்கம்), த.ஆயிலியம்(ஏழாலை ஸ்ரீ விநாயக ஐ.நா.சங்கம்).

400 மீற்றர் ஆண் (18-40 வயது) எம்.மோகன்ராஜ் (இணுவில் அபிராமி சி.க.கூ.சங்கம்), வை.ஜீவநாதன் (இணுவில் அபிராமி சி.க.கூ.சங்கம்), எஸ்.சுதர்சன் (இணுவில் அபிராமி சி.க.கூ.சங்கம்).

400 மீற்றர் பெண் (18 - 40 வயது) த.நிரோஜனா (நீர்வேலி ஸ்ரீ முருகன் சி.க.கூ.சங்கம்), சி.டனுஷிகா (வட்டுக் கோட்டை கால்நடை வளர். கூ.சங்கம்), கி.யசிந்தா (நீர்வேலி ஸ்ரீ முருகன் சி.க.கூ.சங்கம்).

4X100 மீற்றர் அஞ்சல் ஆண் இணுவில் அபிராமி சி.க.கூ. சங்கம், வடமராட்சி கிழக்கு ப.தெ.வ.அ.கூ. சங், ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயக ஐ.நா. சங்.

4X100 மீற்றர் பெண். நீர்வேலி ஸ்ரீ முருகன் சி.க.கூ.சங்கம். ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயக ஐ.நா. சங், நவாலி முருகானந்தா சி.க.கூ. சங்கம்.

4X200மீற்றர் ஆண். இணுவில் அபிராமி சி.க.கூ.சங்கம், வடமராட்சி கிழக்கு ப.தெ.வ.அ.கூ. சங்,ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயக ஐ.நா. சங்.

4X200மீற்றர் பெண் நீர்வேலி ஸ்ரீ முருகன் சி.க.கூ.சங்கம், ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயக ஐ.நா. சங்., நவாலி முருகானந்தா சி.க.கூ. சங்கம்.

கயிறு இழுத்தல் (ஆண்) ஊர்காவற்றுறை பல.நோ. கூ.சங்கம், இணுவில் அபிராமி சி.க.கூ.சங்கம்.

கயிறு இழுத்தல் (பெண்) . ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாய ஐ.நா. சங், நீர்வேலி ஸ்ரீ முருகன் சி.க.கூ.சங்கம்.

துடுப்பாட்டம் (ஆண்) இணுவில் அபிராமி சி.க.கூ.சங்கம், தெல்லிப்பழை ப.தெ.வ.அ.கூ.சங்கம்

கரபந்தாட்டம் (ஆண்) அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம், இணுவில் அபிராமி சி.க.கூ.சங்கம்.

(இ)

காலைக்கதிர் Kalaikkathir



# அ.தி.மு.கவின் குழப்பங்கள் தீர்ந்து அனைவரும் இணைய வேண்டும்!

## தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை தெரிவிப்பு



அ.தி.மு.க. கட்சியில் குழப்பங்கள் தீர்ந்து அனைவரும் இணைய வேண்டும். கட்சிப் பிரச்சினை ஆட்சியைப் பாதித்து விடக் கூடாது.

-இவ்வாறு பா.ஜ.க. தமிழகத் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

துணை ஜனாதிபதி வெங்கய்யா நாயுடுவின் பதவி ஏற்பு விழாவுக்குச் சென்ற தமிழக பா.ஜ.க. தலைவர், விமான நிலையத்தில் வைத்து ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழக அரசியலில் பல நல்ல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. சில குழப்பங்களுக்குத் தீர்வு கண்டால் தமிழகத்தில் நிலையான ஆட்சி தொடர்வதற்கு வாய்ப்பு உள்ளது.

கடந்த இரண்டு மூன்று நாள்களாக சில தீர்வு முயற்சிகள் சரியான முறையில் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. தமிழக அரசியல் இன்னும் ஆரோக்கியமாக மாறவேண்டும்.

அ.தி.மு.கவைப் பா.ஜ.க. வெளியில் இருந்து இயக்குகிறது என்ற கருத்தை நான் முற்றிலுமாக மறுக்கிறேன். அ.தி.மு.கவின் உட்கட்சி பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே எங்களுடைய விருப்பம். தமிழ் உணர்வோடு கூடிய தேசியம் மற்றும் மாநில அக்கறைதான் தேச ஒற்றுமைக்கு நல்லது.

இதேவேளை, மாணவர்களைத் தெருவிலே இறங்கிப் போராடுங்கள் என வைகோ அழைக்கின்றமை முறையல்ல. அரசியலில் மாணவர்களைப் புகுத்தாதீர்கள். அதைப் புரிந்து கொண்டு இங்குள்ள அரசியல்வாதிகள் பேச வேண்டும்.-என்றார். (ச)

---

நம்பிக்கையில்லாப் பிரேரணை:

## தமிழக அரசின் மீது கொண்டு வரப்படும்!

### ஸ்டாலின் தெரிவிப்பு

அவசியம் ஏற்படுமாயின் தமிழக அரசின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படும் என தி.மு.க வின் செயல் தலைவர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று இடம்பெற்ற மாவட்ட செயலாளர்களுடனான கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக்கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஜெயலலிதாவின் மரணத்தை தொடர்ந்து அ.தி.மு.கவில் பிளவுகளும், சர்ச்சைகளும் ஏற்பட்டுள்ளன.

இதனால், தமிழகத்தில் அசாதாரண சூழல் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக மக்கள் பல்வேறு பாதிப்புகளைச் சந்தித்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது அ.தி.மு.கவில் குழப்ப நிலைகள் ஏற்பட்டு முத்தரப்பு மோதல்கள் வெடித்துள்ளன. இந்த நிலையில், ஸ்டாலினின் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான பேச்சால் தமிழகத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

---

## லடாக் சிகரத்தில் ஏறி தமிழக மாணவி சாதனை!

தமிழகத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர் லடாக் சிகரத்தில் ஏறிச் சாதனை படைத்துள்ளார்.

சென்னையைச் சேர்ந்தவர் காவியா. இவர் அங்குள்ள தனியார் கல்லூரி ஒன்றில் மூன்றாமாண்டு படித்து வருகிறார். இவருடன் நாடு முழுவதிலும் இருந்து 18 மாணவிகள் லடாக் சிகரத்தில் ஏறுவதற்குத் தேர்வு செய்யப்பட்டனர்.

ஹிமாச்சலப் பிரதேசத்தில் ஒரு மாதம் மலையேற்ற பயிற்சியைப் பெற்ற பின்னர், பனி படர்ந்த கடுமையான வானிலை கொண்ட லடாக் மலையில் ஏறி இந்த சாதனையை நிகழ்தி உள்ளார்.

---

13 ஆவது குடியரசுத் துணைத் தலைவராக

# வெங்கய்ய நாயுடு நேற்று பதவியேற்பு!

டில்லி, ஓக. 12

இந்தியாவின் 13 ஆவது குடியரசுத் துணைத் தலைவராக வெங்கய்ய நாயுடு நேற்று வெள்ளிக்கிழமை பதவியேற்றார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற இந்தப் பதவியேற்பு நிகழ்வில் வெங்கய்ய நாயுடுக்கு குடியரசுத் தலைவர் ராம்நாம் கோவிந்த் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பிரதமர் மோடி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங், மத்திய அமைச்சர்கள், தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.



துணைக் குடியரசுத் தலைவராக பதவியேற்றுக் கொண்ட பின்னர் மாநிலங் களவையில் வெங்கய்ய நாயுடு தெரிவித்தவை வருமாறு:-

''இனி நான் எந்தக் கட்சியையும் சார்ந்தவன் அல்லன். அரசியலுக்கு அப்பாற்பட்டவனாகச் செயற்படுவேன். மாநிலங்களவை சுமுகமாக இயங்குகிறதா என்பதையும் ஒவ்வோர் உறுப்பினருக்கும் பேச வாய்ப்பு கிடைக்கின்றதா என்பதையும் உறுதி செய்வேன். நான் ஒரு சிறிய கிராமத்தில் இருந்து வந்தவன். ஒரு விவசாயியின் மகன். நீண்ட அரசியல் பயணத்துக்குப் பின் இந்த நிலையை அடைந்துள்ளேன். எனது பின்னணியைக் கருதியும் எனக்குவழங்கப்பட்டுள்ள பொறுப்புகளை உணர்ந்தும் எனது பணியைச் சிறப்பாகச் செய்வேன். எனக்கு கொடுக்கப்பட்டுள்ள கௌரவம் என்னை நெகிழ்ச்சியடையச் செய்துள்ளது. எனக்கு ஆதரவு அளித்த அத்தனை பேருக்கும் கடமைப்பட்டுள்ளேன்.''- என்றார். (ச)

---

ராஜீவ் காந்தி கொலை:

## ரோபர்ட் பயஸ், ஜெயக்குமாரை விடுதலை செய்ய முடியாது!

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றுள்ள ரோபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோரை விடுவிக்க முடியாது என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்த அறிவித்தல் சென்னை உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, ஜெயக்குமார், ரவிச்சந்திரன், ரோபர்ட் பயஸ் ஆகிய 7 பேரும் கடந்த 26 ஆண்டுகளாகச் சிறைத் தண்டனையை அனுபவித்து வருகின்றனர்.



மத்திய அரசு அறிவிப்பு

இந்த நிலையில், ரோபர்ட் பயாஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகிய இரண்டு பேரும் கடந்த 2012 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தனர்.

அதில், ''ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் உள்ளோம். ஆயுள் தண்டனை கைதிகள் நல்லொழுக்கத்தின் அடிப்படையில் 14 ஆண்டுகளில் விடுதலை செய்யப்படுகின்றமை வழக்கம். ஆனால், தமிழக அரசு எங்களை மட்டும் 20 ஆண்டுகள் கழிந்த பிறகும் விடுவிக்காமல் உள்ளது. எனவே, எங்களை உடனடியாக விடுதலை செய்ய தமிழக அரசுக்கு உத்தரவிட வேண்டும்' -என்று கோரியிருந்தனர்.

இந்த நிலையில், அவர்கள் இருவரையும் விடுதலை செய்ய முடியாது என இந்திய மத்திய அரசு சார்பில் சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ''என்னை கருணை கொலை செய்து விட்டு எனது உடலை குடும்பத்தாரிடம் ஒப்படைத்து விடுங்கள்''- என்று தமிழக அரசுக்கு ரோபர்ட் பயஸ் அண்மையில் கடிதம் ஒன்றை எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வடகொரியாவின் ஏவுகணையை எம்மால் இடைமறிக்க முடியும்!

## ஜப்பான் இராணுவ அமைச்சர் அதிரடி

டோக்கியோ, ஓக. 12

அமெரிக்கத் தீவை நோக்கி வடகொரியா ஏவுகணை செலுத்தினால், அதனை எம்மால் இடைமறிக்க முடியும்.

-இவ்வாறு ஜப்பான் இராணுவ அமைச்சர் ஒனோடெரா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்குச் சொந்தமான குவாம் தீவின் மீது நான்கு ஏவுகணைகளை ஏவித் தாக்குதல் நடத்தப்போகிறோம் என வடகொரியா விடுத்துள்ள மிரட்டல், உலக அரங்கை அதிர வைத்துள்ளது.

அடுத்த சில தினங்களில் இதற்கான திட்டத்தை வடகொரியா இறுதி செய்யப்போகிறது என அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. வடகொரியாவின் 'க்வாசாங்-12' ஏவுகணைகள்,



ஜப்பானின் மீது பறந்து சென்று குவாம் தீவுக்கு அருகே 30 கிலோ மீற்றர் தொலைவில் கடலில் விழும் என தெரிவிக்கப்படுகிறது.


குறிப்பாகஜப்பானின்ஷிமானே, ஹிரோஷிமா, கொய்ச்சி மாகாணங்களின் மீது அந்த ஏவுகணைகள் பறந்து செல்ல வாய்ப்புள்ளது என வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில், மேற்படி விவகாரம் தொடர்பில் ஜப்பான் நாடாளுமன்றத்தின் கீழ் சபைக் குழுவில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்மேற்கண்டவாறு கூறினார்.

''அமெரிக்காவின் பசிபிக் பகுதி நோக்கி ஏவுகணையைச் செலுத்தினால், அதைத் தாக்குவதற்கு ஜப்பான் அனுமதிக்கப்பட வேண்டும். இதுதான் எமது அரசின் நிலைப்பாடு.'' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஆனால், குவாம் தீவு மீது செலுத்தப்படுகிற ஏவுகணையை சுட்டுத்தள்ளும் திறன் ஜப்பானிடம் தற்போது இல்லை என்று வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பாகிஸ்தான் பிரதமர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது!

## முன்னாள் பிரதமர் நவாஸ் ஆவேசம்



பாகிஸ்தானில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர்களுக்குத் தொடர்ந்து அநீதி இழைக்கப்பட்டு வருகிறது.

-இவ்வாறு முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் கூறினார்.

தலைநகர் இஸ்லாமாபாத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றபொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பாகிஸ்தானில் ஒவ்வொரு பிரதமரும் சராசரியாக ஒன்றரை ஆண்டுகாலம் மட்டுமே ஆட்சி புரிந்துள்ளனர். சில பிரதமர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. சிலர் சிறையில் அடைக்கப்பட்டனர். கைவிலங்கிடப்பட்டு சில பிரதமர்கள் அவமதிக்கப்பட்டனர். சிலர் நாடு கடத்தப்பட்டனர்.

ஜனநாயக முறையில் தேர்வு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஜனநாயகத்துக்கு விரோதமான வழிமுறைகளில் பதவி நீக்கம் செய்யப்படுகின்றமையைத் தடுக்க வேண்டும். எனக்கு ஏற்பட்ட நிலை இனி வேறு எந்தப் பிரதமருக்கும் இந்த நாட்டில் நேரக் கூடாது. -என்றார். (ச)

# பிரித்தானிய நகரப் பகுதிகளில் மனிதக் கடத்தல் அதிகரிப்பு!

பிரித்தானியாவின் பெரிய நகரங்களில் மனிதக்கடத்தல் சம்பவங்கள் தற்போது அதிகரித்துள்ளன என பிரித்தானிய தேசிய குற்றத் தடுப்புமுகமைஅமைப்பு எச்சரித்துள்ளது.

இவ்வாறான சட்ட விரோத நகர்வுகளால் சுமார் பத்தாயிரம் முதல் பதின்மூவாயிரம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டது. எனினும் தற்போது அதனை விட அதிகமான மக்கள் பாதிக்கபட்டுள்ளனர் என அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

அண்மையில் நியூகாசல் பகுதியில் சிறுமிகள்உட்படபலவீனமான பெண்களை போதையூட்டி அவர் களை பாலியல் ரீதியாகத் துன்புறுத்திவன்புணர்வுசெய்த ஒரு வலையமைப்பு அகப்பட்டதும். அதில் பங்கெடுத்தனர் என்று கூறப்படும். 18 பேர் குற்றவாளிகளாக முடிவு செய யப்பட்டனர். இந்த நிலையில், மேற்படி தரவுகள் வெளிப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சுரங்கப்பாதைச் சுவரில் பஸ் மோதி

# சீனாவில் விபத்து; 36 பேர் உயிரிழப்பு!



பீஜிங், ஓக. 12

சீனாவில் பஸ் ஒன்று சுரங்கப் பாதை சுவரில் மோதி விபத்துக்குள்ளானதில், 36 பேர் உயிரிழந்தனர். 13 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

சீனாவின் சேன்ஸ்கி மாகாணத்தில் அமைந்துள்ள குயிலிங் சுரங்கத்தை அண்டிய நெடுஞ்சாலைப் பகுதியிலேயே நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு இந்தக் கோர விபத்து இடம்பெற்றது.

செங்குடு நகரத்தில் இருந்து ஹெனான் மாகாணத்தில் உள்ள லோயாங் நகரத்துக்குச் செல்லும் வழியிலேயே இந்த பஸ் விபத்துக்குள்ளானது என உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதில் படுகாயம் அடைந்தவர்கள் உள்ளூர் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

சீனாவில் நெடுஞ்சாலைகளில் அதிக வேகம் காரணமாக ஆண்டுதோறும் வீதி விபத்துகளில் சுமார் இரண்டரை லட்சம் பேர் உயிரிழக்கின்றனர் என உலக சுகாதார அமைப்பு கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பாகிஸ்தானின் அன்னை திரேஸா மருத்துவர் ரூத் பாவ் காலமானார்!



இஸ்லாமாபாத், ஓக. 12

பாகிஸ்தானின் அன்னை திரேஸா (வயது-87) என அழைக்கப்படும் மருத்துவர் ரூத் பாவ் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலமானார்.

தொடுவதற்கு கூட அருவெறுப்பு அடையும் நிலையில் உள்ள தொழுநோயாளிகளைத் தொட்டு, அவர்களுக்கு அன்புடனும், ஆதரவுடனும்சிகிச்சை அளித்தவர் அன்னை தெரேஸா. அவரைபோலவே சேவை மனப்பான்மை கொண்ட ஒரு மருத்துவர் தான் பாகிஸ்தானில் வசித்து வந்த ரூத் பாவ் .

ஜேர்மனில் பிறந்த ரூத்பாவ் 1960ஆம் ஆண்டில் முதன் முதலாக பாகிஸ்தானுக்குச் சென்றார். அங்கு சென்ற அவர் தொழுநோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வந்தார்.

இவர் கடந்த சில வாரங்களாக வயது முதிர்வால் ஏற்பட்ட உடல் நலக் குறைவால் கடும் அவதிப்பட்டு வந்தார்.

இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். இவருடைய மறைவுக்கு பாகிஸ்தானில் உள்ள முக்கிய தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இவரது சேவையைப் பாராட்டி பாகிஸ்தான் அரசு பல மதிப்பு மிகுந்த விருதுகளை வழங்கிக் கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ட்ரம்பைக் கேலி செய்து வெள்ளை மாளிகைக்கு முன் கோழி பொம்மை!



வொஷிங்டன், ஓக. 12

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பைத் திறமை இல்லாதவர் என சித்திரிக்கும் வகையில் வெள்ளை மாளிகை முன்னால் காற்றடைத்த கோழி பொம்மை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பொறுப் பேற்ற பிறகு சர்ச்சைக்குரிய பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார்.

இந்தநிலையில், வொஷிங்டனின் அமைந்துள்ள ஜனாதிபதியின் அதிகாரபூர்வ இல்லமான வெள்ளை மாளிகைக்கு முன் காற்றடைத்த 30 அடி உயர பலூன் கோழி பொம்மை வைக்கப்பட்டுள்ளது.

அது ட்ரம்ப் கோபத்துடன் இருக்கின்றமை போல தயாரிக்கப் பட்டுள்ளது.

இதை இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சமூக சேவகர் தரன்சிங் பிரன் வைத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர் ஆவணப்பட இயக்குநர் ஆவார்.

# கௌரவத்தை காக்க வேண்டிய கட்டாயத்தில் இன்று களமிறங்குகிறது இலங்கை அணி!



டுபாய், ஒக. 11

இந்தியாவுடனான டெஸ்ட் தொடரை இழந்துள்ள இலங்கை அணி தொடர் முழுவதிலும் தோல்வி அடையும் நெருக்கடியை தவிர்க்கும் ஒரு கௌரவப் போராட்டத்திற்காக மூன்றாவதும் கடைசியுமான டெஸ்ட் போட்டியில் இன்று களமிறங்கவுள்ளது.

இலங்கை அணியை சகல துறைகளிலும் துவம்சம் செய்திருக்கும் இந்திய அணி அந்த ஆதிக்கத்தை தக்கவைத்துக் கொள்ள கடைசி டெஸ்டிலும் விட்டுக் கொடுக்காமல் விளையாடும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே, கண்டி பல் லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இன்று ஆரம்பமாகவிருக்கும் இலங்கை-இந்திய அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் கடைசியுமான டெஸ்ட் போட்டி, தொடர் தீர்மானிக்கப்பட்ட நிலையிலும் அதிக எதிர்பார்ப்புகள் கொண்ட போட்டியாக மாறியுள்ளது.

இந்த தொடரில் இதுவரை நடந்த இரண்டு போட்டிகளையும் ஒப்பிடுகையில் இந்திய அணி துடுப்பாட்டம், பந்து வீச்சு இரண்டு துறைகளிலும் இலங்கையை விடவும் பல மடங்கு முன்னிலை வகிக்கிறது.

ஒட்டுமொத்தமாக இந்திய அணி மூன்று இன்னிங்ஸ்களில் விளையாடி 1440 ஓட்டங்களை பெற்றிருக்கிறது. அதாவது விக்கெட் ஒன்றுக்கு சராசரியாக 65.45 ஓட்டங்களை பெற்றது.

எனினும், இலங்கை அணி நான்கு இன்னிங்ஸ்களில் மொத்தம் 1,105 ஓட்டங்களையே பெற்றது. இதன்படி பார்த்தால் அந்த அணி விக்கெட் ஒன்றுக்கு சராசரியாக 27.67 ஓட்டங்களையே குவித்தது.

பந்து வீச்சிலும் இதே நிலை தான். விருந்தாளிகளான இந்தியா 1931 பந்துகளை வீசி இலங்கை அணியின் 40 விக்கெட்டுகளை வீழ்த்தியது.

அதாவது, இலங்கை அணி துடுப்பெடுத்தாடிய நான்கு இன்னிங்ஸ்களிலும் சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. இந்திய பந்து வீச்சாளர்கள் 40.27 பந்துகளுக்கு ஒரு விக்கெட் வீதம் வீழ்த்த தவறவில்லை.

மறுபக்கம் இலங்கை பந்து வீச்சாளர்கள் 2065 பந்துகளை எறிந்து 22 விக்கெட்டுகளையே வீழ்த்தியது. அதாவது இந்தியா துடுப்பெடுத்தாடிய மூன்று இன்னிங்ஸ்களில் ஒரு இன்னிங்ஸில் மாத்திரமே அந்த அணியின் அனைத்து விக்கெட்டுகளையும் இலங்கையால் சுருட்ட முடிந்தது. இதற்கு இடையில் இலங்கை 93.86 பந்துகளுக்கு ஒரு விக்கெட் வீதமே வீழ்த்தியது.

இந்த தரவுகள் இரு அணிகளுக்கும் இடையில் காணப்படும் அதிக இடைவெளியை காட்டுகிறது.

**இலங்கையின் மீளாத காயம்**

இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் மோசமான தோல்விகளை சந்தித்து சொந்த மண்ணில் தொடரையும் இழந்து நிர்க்கதியான நிலையிலேயே இலங்கை அணி பல்லேகல டெஸ்டில் களமிறங்குகிறது. இலங்கை அணியின் நான்கு வீரர்கள் காயங்களால் வெளியேறி இருப்பதும் அணிக்கு பெரும் பலவீனமாகும்.

அணியின் ஒரே நம்பிக்கையாக இருக்கும் பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத்திற்கு முதுகுவலி பிரச்சினையால் கடைசி டெஸ்டில் ஓய்வு வழங்கப்படுள்ளது.

வேகப்பந்து வீச்சாளர் நுவன் பிரதீப் கொழும்பு டெஸ்டில் 17.4 ஓவர்கள் மாத்திரம் வீசிய நிலையில் தசைப்பிடிப்பு காரணமாக தொடரில் இருந்து வெளியேறினார். சகலதுறை வீரர் அசேல குணரத்ன ஏற்கனவே, தொடரின் ஆரம்பத்திலேயே அணியில் இருந்து வெளியேறிவிட்டார். மற்றொரு முன்னணி வேகப்பந்து வீச்சாளரான சுரங்க லக்மாலும் தனது முதுகுப்பகுதியில் ஏற்பட்டிருக்கும் உபாதையால் தொடரில் விளையாட முடியாமல் இருக்கின்றார்.

இலங்கை அணிக்கு மூன்றாவது டெஸ்ட் போட்டியிலும் வீரர்களில் பல மாற்றங்களை ஏற்படுத்தியே புதிய போட்டி உத்திகளுடன் களமிறங்கவேண்டி ஏற்பட்டுள்ளது.

இதன்படி வேகப்பந்து வீச்சாளர்களான துஷ்மந்த ஷமீர மற்றும் லஹிரு கமகே புதிதாக 15 பேர் குழாமில் இணைக்கப்பட் டிருக்கிறார்கள். மணிக்கு 140 கிலோ மீற்றர் வேகத்தில் பந்து வீசும் திறன் கொண்ட சமீர அணிக்கு அழைக்கப்பட்டிருப்பது இலங்கை மூன்றாவது டெஸ்டில் வேகப்பந்து வீச்சு மீது அதிக நாட்டம் கொண்டிருப்பதை வெளிக்காட்டுகின்றது.

இலங்கை அணி இரண்டு வேகப்பந்து வீச்சாளர்களுடன் மூன்றாவது டெஸ்டில் களமிறங்கும் வாய்ப்புகள் அதிகம் இருக்கும் நிலையிலேயே, டெஸ்ட் போட்டி அனுபவம் இல்லாத கமகே மற்றொரு வேகப்பந்து வீச்சாளராக அழைக்கப்பட்டுள்ளார். இலங்கை குழாமில் ஏற்கனவே லஹிரு குமார மற்றும் விஷ்வ பெர்னாண்டோ ஆகிய இரு வேகப்பந்து வீச்சாளர்கள் உள்ளனர்.

மறுபக்கம் ரங்கன ஹேரத் இல்லாத நிலையில் இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சில் யார், முன்னின்று செயற்படப் போகிறார்கள் என்ற பெரும் கேள்வி எழுந்திருக்கிறது.

டில்ருவன் பெரேரா மற்றும் மலிந்த புஷ்பகுமார வுடன், புதிர் பந்துகளை வீசும் சைனமன் பந்துவீச்சாளர் லக்ஷான் சந்தகனும் இலங்கை அணியில் சுழற்பந்து வீச்சாளராக உள்ளனர். எஸ்.எஸ்.சி. போட்டியில் தனது கன்னி ஆட்டத்தில் ஆடிய புஷ்பகுமார குறிப்பிடும்படியாக ஆடவில்லை.

இந்த நிலையில் இலங்கை பதினொருவர் அணியில் இடம்பெறப் போகும் சுழற்பந்து வீச்சாளர்கள் குறித்து ஆடுகளத்தை பொறுத்தே மாற்றங்கள் கொண்டுவர வாய்ப்புகள் அதிகம்.

கடந்த ஜூனில் இடம்பெற்ற சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் அரையிறுதிக்கு முன்னேறாமல் வெளியேறிய இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் கிரஹாம் போர்ட் தனது ஒப்பந்தத்தின் பாதியில் விலகியதில் இருந்து இலங்கை அணி சிக்கலை சந்தித்து வருகின்றது.

இதனை அடுத்து நடந்த ஸிம்பாப்வேக்கு எதிராக சொந்த மண்ணில் ஒருநாள் தொடரை இழந்ததால் அணியின் மனநிலை மேலும் பலவீனம் அடைந்தது. இப்போதைய நிலையில் இலங்கை அணிக்கு ஒரு திருப்புமுனையான வெற்றியே தேவைப்படுகிறது. அந்த வெற்றியை பல்லேகல டெஸ்டில் பெற அணித்தலைவர் சந்திமால் எதிர்பார்க்கிறார்.

உண்மையில் இதுபோன்ற அணி ஒன்றை (இந்தியா) எம்மால் ஒரு போட்டியில் வெல்ல முடியுமாக இருந்தால் அணியில் மனநிலையை உயர்த்த முடியுமாக இருக்கும். அவர்கள் உலகின் முதல்நிலை அணியாகும் என்கிறார் சந்திமால்.

எனினும் இன்றைய போட்டியில் நீண்ட நாட்களின் பின்னர் லஹிரு திரிமான்ன மத்திய தர வரிசைக்காக அணியில் இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அது போன்றே விஷ்வ பெர்னாண்டோ மற்றும் லஹிரு குமார ஆகியோர் பந்து வீச்சு துறைக்காக அணியில் இணைக்கப்பட அதிக வாய்ப்புள்ளது.

**மேலும் சாதிக்க எதிர்பார்க்கும் இந்தியா**

எஸ்.எஸ்.சி. டெஸ்டில் இந்திய அணி இன்னிங்ஸால் வென்றபோது அவ்வணி கடந்த 10 போட்டிகளில் 8 ஆவது வெற்றியை பெற்றது. அதேபோன்று டெஸ்ட் தொடரில் தொடர்ச்சியாக எட்டாவது வெற்றியை பெற்றது. அது போன்றே இலங்கை மண்ணில் இந்தியா இன்னிங்ஸ் வெற்றியை பெறுவதும் முதல் முறையாக இருந்தது.

எனவே, முழுமை பெற்ற ஓர் அணியை கொண்டிருக்கும் இந்தியா தனது சாதனை பட்டியலை நீட்டிக் கொள்ளும் நோக்கிலேயே இன்று மூன்றாவது டெஸ்டில் களமிறங்கும்.

இந்த வரிசையில் இந்திய அணி பல்லேகல டெஸ்டை வெற்றி பெற்றால் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை வெளிநாட்டு மண்ணில் 3-0 என முழுமையாக வெல்லும் முதல் சந்தர்ப்பமாக அது இருக்கும்.

இதற்கு முன்னர் இந்திய அணி மூன்று தடவைகள் முழுமையாக தொடரில் வென்றுள்ளது. எனினும் அவை அனைத்தும் சொந்த மண்ணில் நிகழ்த்திய சாதனைகளாகும்.

இந்த நிலையில் பல்லேகல டெஸ்டில் இந்திய அணி சில மாற்றங்களுடனே களமிறங்க எதிர்பார்த்துள்ளது. குறிப்பாக ஐ.சி.சி ஒழுக்காற்று விதியை மீறியதால் இடைநீக்கத்திற்கு உள்ளாகி இருக்கும் சுழற்பந்து வீச்சாளர் ரவிந்திர ஜடேஜா இந்த டெஸ்டில் விளையாட மாட்டார்.

அதற்குப் பதில் இந்தியாவின் 15 பேர் அணியின் டெஸ்ட் அனுபவம் அற்ற சுழற்பந்து வீச்சாளர் அக்ஷார் படேல் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், ஜடேஜாவின் இடத்திற்கு இவருடன் மற்றைய சுழற்பந்து வீச்சாளரான குல்தீப் யாதவ் போட்டி போடுகிறார்.

இந்திய துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் சோபித்து வரும் நிலையில் வீரர்களுக்கு ஓய்வு வழங்கப்படுவதற்கு அப்பால் குறிப்பிட்டு மாற்றங்கள் செய்ய வேண்டிய தேவை தலைவர் விராட் கோஹ்லிக்கு இல்லை.

குறிப்பாக, இந்த டெஸ்ட் தொடரில் சிதேஷ்வர் புஜாரா இரண்டு சதங்களுடன் அதிகபட் சமாக 301 ஓட்டங்களை பெற்றிருக்கிறார். இதன் ஓட்ட சராசரி 100 ஐ எட்டுவது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir


# பிபா தரவரிசையில் முதலிடத்தில் பிரேசில்!



பிரான்ஸ், ஓக. 12

சர்வதேச உதைபந்து சம்மேளனத்தின் (பிபா) புதிய தரவரிசை பட்டியலில் உலகக் கிண்ண நடப்புச் சம்பியன் ஜெர்மனியை பின்தள்ளி பிரேஸில் அணி மீண்டும் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது.

பிபாவின் புதுப்பித்த தரவரிசையில் ஜெர்மனி ஒரு இடம் பின்தள்ளப்பட்டு இரண்டாவது இடத்திற்கு வந்ததோடு, பிரேஸில் ஒரு இடம் முன்னேறி மீண்டும் முதலாவது இடத்தைப் பிடித்தது.

ஜெர்மனி அணி 2014 ஆம் ஆண்டுக்கு பின் கடந்த ஆண்டிலேயே முதலிடத்திற்கு முன்னேறியபோதும் தற்போது அதனை தக்கவைத்துக் கொள்ள முடியாமல்போயுள்ளது.

எனினும் ஆர்ஜன்டீனா தொடர்ந்தும் மூன்றாவது இடத்தில் நீடிக்கிறது. முதல் மூன்று இடங்களில் இருக்கும் பலம்கொண்ட மூன்று அணிகளுக்கும் இடையில் தொடர்ந்தும் நெருக்கமான போட்டி நீடிக்கிறது.

இதில் 1993 ஆம் ஆண்டு பிபா தரவரிசையின் முதல் மாதத்தில் 3 ஆவது இடத்திற்கு வந்த பின் சுவிட்சர்லாந்து தற்போது தனது சிறந்த தரநிலையை பதிவு செய்துள்ளது. அந்த அணி ஓர் இடம் முன்னேறி 4 ஆவது இடத்தில் உள்ளது. போலந்து வரலாற்றில் தனது சிறந்த தரநிலையைப் பெற்று ஓர் இடம் முன்னேறி 5 ஆவது இடத்தை பிடித்துள்ளது.

போர்த்துக்கல் இரண்டு இடங்கள் பின்தங்கி 6 ஆவது இடத்திற்கு சரிந்ததும், பெல்ஜியம் ஓர் இடம் முன்னேறி 9 ஆவது இடத்திற்கு வந்ததுமே தரவரிசையின் முதல் 10 இடங்களில் ஏற்பட்ட ஏனைய மாற்றங்களாகும்.

கடந்த ஒரு மாதத்தில் இடம்பெற்ற மொத்தம் 64 சர்வதேச போட்டிகளின் அடிப்படையிலேயே புதிய தரவரிசையில் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

குறிப்பாக, வடக்கு, மத்திய அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளுக்கு இடையில் கடந்த மாதம் நடைபெற்ற CONCACAF தங்கக் கிண்ணத் தொடரானது, தரவரிசையில் கீழ் இடங்களில் உள்ள அணிகளின் மாற்றத்தில் அதிக தாக்கம் செலுத்தியுள்ளது.

தங்கக் கிண்ண இறுதிப் போட்டியில் தோற்ற ஜமைக்கா இம்முறை தரவரிசையில் அதிக புள்ளிகளைப் பெற்ற அணியாக உள்ளது. அந்த அணி மொத்தம் 172 புள்ளிகளை அதிகரித்துக் கொண்டு 76 ஆவது இடத்தில் இருந்து 57 ஆவது இடத்திற்கு வந்தது.

தங்கக் கிண்ண சம்பியனான அமெரிக்கா 9 இடங்கள் முன்னேறி 26 ஆவது இடத்தை பிடித்தது. இந்த தொடரில் ஆடிய கொஸ்டாரிக்கா 5 இடங்கள் ஏற்றம் பெற்று 26 ஆவது இடத்தையும் மெக்சிகோ 2 இடங்கள் முன்னேறி 21 ஆவது இடத்தையும் பிடித்தன.

ஓகஸ்டில் புதுப்பிக்கப்பட்ட தரவரிசையில் அதிகம் பின்தள்ளப்பட்ட அணிகளாக கியூபா மற்றும் குராகவ் என்பன உள்ளன. இந்த இரு அணிகளும் 18 இடங்கள் சரிந்தன. இதனால் கியூபா 182 ஆவது இடத்திலும் குராகவ் 86 ஆவது இடத்திலும் காணப்படுகின்றன.

இம்முறை தரவரிசையில் ஆபிரிக்க நாடான நமீபியா அதிகபட்சம் 20 இடங்கள் முன்னேற்றம் கண்டுள்ளது. இதனால் 156 ஆவது இடத்தில் இருந்த அந்த அணி 136 ஆவது இடத்திற்கு முன்னேறியது. தரவரிசை புதுப்பிக்கப்படும் காலத்தில் 3 போட்டிகளில் விளையாடிய நமீபியா ஒன்றில் வென்று இரண்டில் தோற்றது.

இலங்கை உதைபந்து அணியை பொறுத்தவரை எட்டு மாதங்களுக்கு மேலாக சர்வதேச போட்டிகளில் விளையாடாத நிலையில் தரவரிசையில் தொடர்ந்தும் 197 ஆவது இடத்தில் நீடிக்கிறது. கடந்த மார்ச் மாதம் தொடக்கம் இதே இடத்தில் நீடிக்கும் இலங்கையின் மோசமாக தரநிலை இதுவாகும்.

கடந்த தரவரிசை வெளியீட்டின்போது, 96 ஆவது இடத்தில் இருந்த இந்தியா ஒரு இடம் பின் தள்ளப்பட்டு 97ஆவது இடத்தில் இருக்கின்றது.

அடுத்து எதிர் வரும் செப்டெம்பர் 14 ஆம் திகதி பிபா தரவரிசை மீண்டும் புதுப்பிக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய போட்டிக்கான இலங்கை அணி வீரர்கள்!

கொழும்பு, ஓக. 12

இந்திய அணிக்கெதிராக 3 ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடவுள்ள 15 பேர் கொண்ட இலங்கை அணியை இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணிக்கு டினேஷ் சந்திமால் தலைமை தாங்கவுள்ள அதேவேளை, சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் திற்கு இப் போட்டியில் ஓய்வளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணி வீரர்களின் விபரம் வருமாறு:-

டினேஷ் சந்திமல் ( அணித் தலைவர் ), அஞ்சலோ மெத்தியூஸ், உபுல் தரங்க, திமுத் கருணாரத்ன, நிரோஷன் டிக்வெல்ல, குசல் மெண்டிஸ், தனஞ்சய, லகிரு திரிமன்னே, லகிரு குமார, விஷ்வ பெர்னாண்டோ, துஷ்மந்த சாமிர, லகிரு கமகே, டில்ருவான் பெரேரா, மிலிந்த புஷ்பகுமார, லக்ஷன் சந்தகன் ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

# இந்தியாவுடன் விளையாடுவது சவால்மிக்கது: அரவிந்த!



கொழும்பு, ஓக. 12

மிகவும் பலம்பொருந்திய இந்திய அணியுடன் இலங்கை விளையாடுவது மிகவும் சவால்மிக்கதும், போட்டித்தன்மை வாய்ந்ததாகவும் அமைந்திருக்கிறது என இலங்கை அணியின் முன்னாள் வீரர் அரவிந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டிகள், இரண்டு அணிகளுக்கும் இடையிலான பொருத்தப்பாடின்மையை வெளிப்படுத்துகின்றது.

இந்திய கிரிக்கட் அணி, அதன் கட்டுப்பாட்டு சபை கொண்டுள்ள மிகப்பெரிய நிதி வளத்தின் பின்னணியில் செயற்படுகிறதுடன் ஐ.பி.எல். தொடர் மூலம் இந்திய அணியின் வீரர்கள் மிகச் சிறந்த அனுபவங்களைப் பெற்றவர்களாக இருக்கின்றனவர்.

இந்த தொடர் உலகின் தலைசிறந்த பயிற்சியாளர்களை இந்திய அணிக்கு ஒரே இடத்தில் வழங்குவதுடன், முக்கியமான பல வீரர்களுடன் இணைந்து விளையாடும் வாய்ப்பையும் இந்திய அணியின் இளைஞர்களுக்கு வழங்குகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் புதிய தலைவராக நஜம் சேத்தி!

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் புதிய தலைவராக நஜம் சேத்தி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவராக இருந்த 83 வயதான ஷகாரியர்கான் தனது உடல் நிலையை கருத்தில் கொண்டு தலைவர் பொறுப்பில் இருந்து விலகியுள்ள நிலையிலேயே பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் புதிய தலைவராக நஜம் சேத்தி தெரிவுசெய்யப்பட்டார்.

10 உறுப்பினர்கள் கொண்ட கிரிக்கெட் சபை குழு நஜம் சேத்தியை எவ்வித போட்டிகளுமின்றி தெரிவுசெய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# தெற்காசியாவில் மூன்றுமுறையாக தங்கம் வென்ற இலங்கைத் தமிழர்!

கொழும்பு, ஓக. 12

தெற்காசிய விளையாட்டுப்போட்டியின் கராத்தே சுற்றுப்போட்டியில் இலங்கை வீரர் சௌந்தரராஜா பாலுராஜ் தொடர்ச்சியாக மூன்றுமுறை (HATRICK) முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தை பெற்றுச்சாதனை படைத்துள்ளார்.

இவர் கிழக்கிலங்கையின் கல்முனை தமிழ்ப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சேனைக்குடியிருப்புக் கிராமத்தைச் சேர்ந்தவர்.

கடந்த 2014 ஆம், 2016 ஆம் ஆண்டுகளில் இந்தியா - புதுடில்லியில் இடம்பெற்ற கராத்தே சுற்றுப் போட்டி யின் சிரேஸ்ட பிரிவு கராத்தே போட்டியில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றுச்



சாதனை படைத்தார்.

இறுதியாக இந்த மாதம் 05 ஆம் திகதி கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற தெற்காசிய கராத்தே சுற்றுப் போட்டியில் முதலிடம் பெற்று மூன்றாவது தடவையாகவும் தங்கப்பதக்கம் பெற்ற ஒரேயொரு இலங்கை வீரர் என்ற பதிவொன்றையும் ஏற்படுத்தியுள்ளார்.

இவரது பயிற்றுவிப்பாளர் சென்சே பொறியியலாளர் எஸ்.முருகேந்திரன்.

இவர் வடக்கு, கிழக்கிலிருந்து ஆசிய கராத்தே போட்டிகளுக்கு மத்தியஸ்தராகத் தெரிவான முதல் வீரராவார். இவர் சர்வதேச 5 ஆவது டான் கறுப்புப்பட்டி வீரராவார் என்பது குறிப்பிடத்தக்கது.





## நல்லாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைமையுடன் தொடர் புடைய வட்டாரங்கள் இத்தக வலை வெளியிட்டன.

கூட்டமைப்பின் நெருக்குதல் நடவடிக்கைகள் அடுத்து வரும் வாரங்களில் கட்டவிழும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித் தன.

இனப்பிரச்சினைத் தீர்வுக் கான விடயங்களையும் உள்ள டக்கியதாக புதிய அரசமைப் பைக் கொண்டுவரும் முயற்சிகள் – நட'வடிக்கைகள் – இப்போது முட்டுச் சந்தில் முடங்கிக் கிடப்பது போல தேங்கியுள்ளன.

அரசமைப்பு வழிகாட்டல் குழு இறுதி செய்து புதிய அரசமைப் புக்கான இடைக்கால அறிக்கை வெளிவருவது சந்தேகத்துக்கு உரியதாக இழுபடுகிறது.

ஆகப் பிந்தியது 2017 ஏப்ர லுக்கு முன்னர் இடைக்கால அறிக்கை வெளிவரும் என கூட் டமைப்புத் தலைமை நம்பிக் கையுடன் எதிர்பார்த்திருந்து – அது இந்த ஒகஸ்டில் வெளி வருவது கூட இப்போது சாத்தியமற்றதாகத் தென்படுகின்றது எனக் கூட்ட மைப்புத் தலைமை உணரு கின்றதாம்.

நல்லாட்சி அரசின் ஒரு பகுதி இந்த முயற்சியில் அசிரத்தை காட்டுவதுடன், அதை முன்நகர விடாமல் முட்டுக்கட்டை போட எத்தனிப்பதாகவும் கூட கூட்டமைப் பின் தலைமை கருதுகின்றதாம்.

அதனால்தான் இவ்விடயத் தில் தொடர்ந்தும் மௌனம் சாதித்து, இணக்கநிலை வரு வதற்குக் காத்திராமல் விடயத்தில் இறங்கி, அழுத்தமும், நெருக்கடி யும் கொடுத்து அரசை உணர வைப்பது எனக் கூட்டமைப்புத் தலைமை தீர்மானித்துள்ளதாம்.

எடுக்கப்பட வேண்டிய நெருக் குதல் நடவடிக்கைகளின் மார்க் கங்கள் குறித்து ஆராயப்பட்டு வருகின்றது. சர்வதேச ஆதர வைத் திரட்டி, சில நடவடிக்கை களை எடுப்பது உட்பட பல்வேறு வழிகள் குறித்து பரிசீலிக்கப் படுகின்றது என்றன அந்த வட் டாரங்கள்.

உள்நாட்டு அரசியலில் மாற் றங்களைக் கொண்டு வரக்கூடிய முடிவுகளை எடுப்பது குறித்தும் தீவிரமாக ஆராயப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## நோர்வேத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சந்திப்பு நாடாளுமன்றத் திலுள்ள எதிர்க்கட்சித் தலை வரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (இ)

## சமுர்த்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றே (நேற்று) வழங்கவேண் டும் எனவும் மேற்படி ஆர்ப்பாட்டத் தில் ஒன்றிணைந்த எதிரணி கோரிக்கை விடுத்திருந்தது.

இன்று (நேற்று) நண்பக லுக்குள் அதற்கான முடிவு அறி விக்கப்படும் என, அமைச்சர் கயந்த கருணாதிலக அவர் களுக்கு பதிலளித்திருந்தார்.

இந்நிலையில், நேற்று முற் பகல் எம்பிலிப்பிட்டிய கம்உதாவ விளையாட்டரங்கில் நடைபெற்ற வளவை வலய விவசாய மக்க ளுக்கு 5,000 காணி உறுதி களை வழங்கும் நிகழ்வில் உரை யாற்றிய ஜனாதிபதி சமுர்த்தி உதவி நிறுத்தப்பட மாட்டாது என்ற உறுதிமொழியை வழங்கினார்.

அது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

சமுர்த்தி நன்மைகளைப் பெறத் தகுதியுடைய ஆனால், அது வழங்கப்படாத பெருந் தொகையானோர் நாட்டில் காணப்படுகின்றனர். அவர் களுக்கு புதிதாக அந்த வரப்பிரசா தங்களை வழங்குவதை விடுத்து, ஏற்கனவே சமுர்த்தி நன்மை களைப் பெறுபவர்களுக்கு அவை நிறுத்தப்படமாட்டா.

சமுர்த்தி நன்மைகளை இல் லாது செய்வதற்கான நடவடிக் கைகள் அரசாங்கத்தால் மேற் கொள்ளப்பட்டு வருவதாக பல் வேறு அரசியல் தூண்டுதல்கள் இடம் பெறுகின்றன. அவற்றில் எந்த வித உண்மையும் இல்லை. பொதுமக்களின் நன்மைகளை கருதியே தற்போதைய அரசாங் கம் கொள்கை ரீதியான தீர்மா னங்களை மேற்கொள்ளும். – என்றார்.

இதேவேளை, அரசாங்கத் தின் மேற்படி அறிவிப்பானது, சமுர்த்தி உதவி நிறுத்தப்பட்டதால் பாதிக்கப்பட்ட நிலையில் நாடெங்கும் போராட்டங்களை நடத்துபவர்களுக்கு கிடைத்த வெற்றி என அவதானிகள் தெரி வித்துள்ளனர். (ம)

## உலக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் எங்கள் மொழி, சைவம் எங்கள் வழி எனும் மகுட வாக்கு டன், சைவத்தமிழ் மறுமலர்ச்சி யில் 'இளைஞர்களின் பங்கும் பணியும்' எனும் தொனிப்பொரு ளில் இந்த மாநாடு இடம்பெற்று வருகின்றது.

மாநாட்டின் தொடக்க நாளான நேற்று, நல்லூரில் இருந்து மாநாடு நடைபெறும் இடமான யாழ்.நீராவியடி இலங்கைவேந் தன் கலைக் கல்லூரி வரை ஆன் மீக எழுச்சிப் பேரணி இடம்பெற் றது.

நல்லை ஆதீனத்திற்கு முன் பாக, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவா மிகள் மற்றும் தென்கயிலை ஆதீன குருமகா சந்நிதானம் அகத்தியர் அடிகளார் ஆகியோ ரின் ஆசியுடன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் பேரணியை ஆரம்பித்து வைத்தார்.

காரைநகர் சிவகாமி அம்மன் ஆலயக் கலைஞர்கள் பழந்தமி ழர் வாத்தியமான பேரிகையை முன்னே முழங்கிச் செல்ல அதன் பின்னே சங்கொலியுடன் பறை, தப்பு, முழவு மற்றும் வாத்தியங் கள் இசைக்க பேரணி இடம் பெற்றது.

இதில் தெல்லிப்பழை மகா ஜனக் கல்லூரி மாண வர்களின் இனியம் இசைக்குழுவினர் கீழைத்தேய வாத்தியங்களை இசைத்துச் சென்றனர். பொன் னாலை வெண்கரம் படிப்பகம், சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக் கல்வி மாணவர்களின் சங்கொலி முழங்க யூனியன் கல்லூரி மாணவர்கள் தேவார பாராயணங்களுடன் சென்றனர்.

நல்லூரில் ஆரம்பித்த எழுச் சிப் பேரணி கோயில் வீதியூடாக சட்டநாதர் சிவன் கோயிலை அடைந்து அங்கிருந்து நாவலர் வீதியூடாகப் பயணித்து பலாலி வீதிக்குச் சென்று அந்த வீதியூ டாக வேம்படிச் சந்தியை அடைந்து ஆஸ்பத்திரி வீதி, சத்திரத்துச் சந்தி ஊடாக கே.கே.எஸ் வீதியால் பயணித்து யாழ்.இந்துக் கல்லூரி வீதியால் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியைச் சென்ற டைந்தது.

இந்தப் பேரணி மற்றும் மாநாட்டில் யாழ்ப்பாணம், மலை யகம், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, மலையகம் போன்ற பல பிரதேசங்களையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான சைவத்தமிழ் இளைஞர்கள் கலந்துகொண்டனர்.

மாநாட்டின் முதல் நாளான நேற்று நாயன்மார் அரங்கு, விபுலானந்தர் அரங்கு போன்ற ஆய்வரங்குகள் இடம்பெற்றன. இன்றும் நாளையும் இந்த மாநாடு இடம்பெறும்.

நேற்றைய மாநாட்டுக்காக தமிழகம் பேரூர் ஆதீனத்தின் இளையபட்டம் மருத்தாசலம் அடிகளார் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவில்உடையில்வந்தபொலிஸ் காரர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை கடையின் முன் னால் நிறுத்தி விட்டு பொருள் களைகொள்வனவுசெய்தபோது அங்கு நிறுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் காணாமற்போயிருந் தது.

அதை அடுத்து அப்பகுதி யில்உள்ளகடையில்பொருத்தப் பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவை பார்வையிட்டபோது நபர் ஒருவர் மோட்டர்சைக்கிளை 'ஹெல்மட்' இன்றி மன்னார் வீதி வழியாக 'இலாவகமாக' செலுத்திச் செல் கின்றமை பதிவாகியுள்ளது. இதனை அடிப்படையாகவைத்து வவுனியா பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு வரு கிறார்கள்.

இதேவேளை, அந்தப் பகுதி யில் சம்பவ நேரத்தில் போக்கு வரத்து பொலிஸார் இருவர் கடமையில் நின்றிருந்தனர் எனக் கூறப்பட்டது. (இ-100)

## சனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற நாடாளுமன்றத் தேர் தலில் ஐக்கிய தேசியக் கட்சி அதிக ஆசனங்களைப் பெற்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசை நிறு வியது.

அதைத் தொடர்ந்து ஐ.தே.க வுடன் இணைந்து ஆட்சியில் பங்குகொள்ளமுடியாது எனத் தெரிவித்து முன்னாள் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ தலை மையிலான பொது எதிரணி சுயாதீனமாகச் செயற்பட ஆரம் பித்தது. அன்றுமுதல் இன்று வரை தேசிய அரசுக்கு எதிரா கப் போராடிவரும் பொது எதிரணி யான மஹிந்த அணி எதிர்வரும் 17 ஆம் திகதி – தேசிய அரசு அமையப்பெற்று இரண்டு வரு டப் பூர்த்தி தினத்தை – இலங் கைக்கு சனிபிடித்த தினமாகப் பிரகடனப்படுத்தி நாட்டின் பல் வேறு இடங்களில் போராட்டங் களை மேற்கொள்ளத் தீர்மானித் துள்ளது.

அது மட்டுமன்றி, தலைநகர் கொழும்பில் பிரதான கூட்டம் ஒன்றைநடத்துவதற்கும் மஹிந்த அணி ஏற்பாடு செய்து வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் ஈடுபட்டு வரும் சுகாதார தொண்டர்கள் நேற்று அமைதி ஊர்வலம் ஒன்றை நடத்தியதுடன் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் மாவட்ட அரச அதிபர் ஆகியோரி டம் மகஜர் ஒன்றையும் கையளித் தனர்.

வவுனியா பிராந்திய வைத் திய அதிகாரி பணிமனை முன் னால் அமைதியான ஊர்வ லத்தை ஆரம்பித்த அவர்கள் மாவட்ட செயலகம் சென்று ஜனாதி பதி, பிரதமருக்கான மகஜரை யும் கையளித்தனர். மாவட்ட அரச அதிபர் இல்லாத காரணத் தால் மகஜரை பிரதம கணக் காளர் அ.பாலகுமார் பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து பிராந் திய வைத்திய அதிகாரி பணி மனைக்குச்சென்று வைத்திய அதிகாரி மகேந்திரனிடம் தமது மகஜரை கையளித்ததுடன் தமது போராட்ட தளத்தில் அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்; யுத்த காலத்தில் இருந்து கடந்த 15 வருடங்களுக்கு மேலாக சுகா தாரத் தொண்டர்களாகப் பணி யாற்றிய எமக்கு இதுவரை நிரந் தர நியமனம் வழங்கப்பட வில்லை. புதிய சுற்றறிக்கை களைக் காட்டி எமது நியமனத்தை புறக்கணித்து வருகின்றனர். ஆனால் கடந்த காலத்தில் ஆற் றிய சேவையை அடிப்படை யாகக் கொண்டு எம்மையும் கடந்த காலத்தில் உள்வாங்கியது போன்று உள்வாங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். நிரந் தர நியமனம் வழங்கும் வரை போராட்டம் தொடரும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (இ-100)

## நல்லூரில் நேற்றிரவு பெண்ணுக்கு எரிகாயம்

நல்லூர்க் கந்தசுவாமி ஆல யத்தின் முன்புறத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பெண் ஒருவர் தீக் காயங்களுக்கு உள்ளானார். இந்தச் சம்பவம் நேற்று இரவு 7.30 மணியளவில் நடந்துள் ளது.

ஆலயத்திற்கு முன்பாக கற் பூரம் கொளுத்துவதற்காக ஏற் பாடு செய்யப்பட்ட இடத்தில் கற் பூரங்கள் கொழுந்துவிட்டு எரிந் தன.

அங்கு கற்பூரம் கொளுத்த முற்பட்ட 51 வயதுடைய பெண் ணொருவர் தவறுதலாக அந்த நெருப்புக்குள் வீழ்ந்தார். இதன் போது அவரது கையிலும் முகத் திலும் எரிகாயங்கள் ஏற்பட்டன. உடனடியாக அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். (ம)

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

வவுனியா, ஓக.12

வவுனியா – தேக்கவத்தைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் வவுனியா பொலிஸாரால் மீட்கப்பட்டது. சடலமாக மீட்கப் பட்டவர் 70 வயதுடைய எஸ். கணேசலிங்கம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தனிமையில் வசித்து வந்த குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டார். (இ-100)

## துன்னாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேர் கைதுசெய்யப்பட்டிருந்த னர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் நேற்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போதே சந்தேகநபர் களை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிவான் உத்தரவிட்டார். (இ)

## கிணற்றில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வேளை தலையோடு தலை அடிபட்டு மரணம் ஏற்பட் டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப் படுகிறது.

இருவரின் சடலங்களும் திருகோணமலை பொது வைத் தியசாலையில் வைக்கப்பட் டுள்ளன. உப்புவெளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ப் பெண் விமானியான அர்ச்சனா செல்லத்துரை நாடாளுமன்றத்திற்குச் சென்று சபை நடவடிக்கைகளைப் பார்வை யிட்டுள்ளார்.

இலங்கையின் முதல் தமிழ்ப் பெண் விமானியான அர்ச்சனா யாழ். வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் தற்போது டென்மார்க்கில் வசித்து வருகின்றார்.

## கோட்டாவுக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் அரசுக்கு ஆயிரத்து 140 கோடி ரூபா நட்டத்தை ஏற்படுத் திய குற்றச்சாட்டில் இந்த வழக் குத் தொடரப்பட்டுள்ளது.

குற்றம்சுமத்தப்பட்டதரப்பில் அடிப்படை எதிர்ப்பு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், இது சம்பந்தமாக தீர்ப்பு எதிர்வரும் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி அறிவிக்கப்படும் என மேலதிக நீதிவான் புத்திக ஸ்ரீராகல தெரிவித்துள்ளார். (இ-7)

காலைக்கதிர்
Kalaikkathir



# 20 ஆவது திருத்தச் சட்டத்தை எதிர்ப்பதற்குத் தயாராகுங்கள்!



## சேகுதாவூத் அழைப்பு

கொழும்பு, ஓக 12

அரசமைப்பில் கொண்டுவரப்படவுள்ள இருபதாவது திருத்தச் சட்டமூலத்தை எதிர்க்கத்தயாராகுமாறு, தூய முஸ்லிம் காங்கிரஸின் பிரமுகரும், முன்னாள் அமைச்சருமான பசீர் சேகு தாவூத் அழைப்பு விடுத்துள்ளார்.

20ஆவது திருத்தச் சட்ட மூலம் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம், சிறுபான்மையினருக்குக் கிடைத்த அற்ப அதிகாரத்தையும் அபகரிக்கும் திட்டமாகும். இந்தத் திட்டத்தை அடியோடு வேரறுக்கஒன்றுபடுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

### தமிழர்களே முஸ்லிம்களே வாருங்கள் ஒற்றுமை 'நெம்புகோலை' உயர்த்திப் பிடிப்போம்

அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை ஒரே நாளில் நடத்துதல் மற்றும் மாகாணசபைகளைக் கலைக்கும் அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கு வழங்குதல் போன்ற விடயங்களை அரசமைப்பில் ஏற்படுத்தும் பொருட்டு, 20ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அரசு கொண்டு வந்துள்ளது. இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்ட கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிறுபான்மை மக்களே, மக்கள் பிரதிநிதிகளே 1987 இல் கிடைத்ததை நிராகரித்ததன் விளைவுதான் இவ்வளவு கால அழிவும் அநியாயமாகும்.

வண்டில்களில் எம்மை கட்டி, மீண்டும் 1987 ஆம் ஆண்டுக்குப் பின்னுள்ள காலத்தை நோக்கி இழுத்துச் செல்வதற்கு, நாம் அடித்துப் பழக்கப்பட்ட எருதுகளில்லை.

எனவே, எமது இலக்கைத் தடுக்கின்ற அரசின் உலக்கையை உடைக்க வேண்டும். இலக்கு என்பது பின்னோக்கியதல்ல முன்னோக்கியதாகும்.

தமிழர்களே, முஸ்லிம்களே, எமது ஒற்றுமை எனும் நெம்புகோலை உயர்த்திப் பிடிப்போம் வாருங்கள். தேவைப்பட்டால், இரு இனங்களின் அரசியல் தலைவர்களையும் கலைத்து விட்டாயினும், மக்கள் ஒன்று திரள வேண்டும்.- என்றார். (எ)

## சாவகச்சேரியில் இன்று 'நாத நர்த்தன வர்ணம்'

சாவகச்சேரி, ஓக. 12

தென்மராட்சிக் கல்வி வலயத்தால் நடத்தப்படும் நாத நர்த்தன வர்ணம் - 2017 என்னும் கருப்பொருளிலான நடன ஆற்றுகை இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வு சாவகச்சேரி நகராட்சி மன்ற பொன்விழா மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நடன நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி அபிவிருத்திக்கழக பிரித்தானியக்கிளைத்தலைவர் வைத்திய கலாநிதி ஆ.புவிநாதன், கௌரவ விருந்தினர்களாகக் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் றஜிதா சின்னத்துரை மற்றும் டிறிபேர்க் கல்லூரி முன்னாள் அதிபர் க.அருந்தவபாலன் ஆகியோர் கலந்துகொள்வர். (இ)

# 20 ஆவது சட்டவரைவுக்கு பொதுவாக்கெடுப்பு நடத்துக!



## வலியுறுத்துகிறார் கம்மன்பில

கொழும்பு, ஓக.12

அனைத்து மாகாண சபைகளினதும் தேர்தலை ஒரே தினத்தில் நடத்துவதற்கான 20ஆவது சட்டவரைவை நடைமுறைப்படுத்த அரசு பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில வலியுறுத்தியுள்ளார்.

அர்த்தமற்ற சமாதானங்களைக் கூறி உள்ளூராட்சித் தேர்தல்களை இழுத்தடித்து வரும் இந்த அரசு தற்போது மாகாண சபைத் தேர்தலிலும் கை வைக்க முயல்கிறது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

20 ஆவது சட்டவரைவு மூலம் சகல மாகாண சபைத் தேர்தல்களையும் ஒரே தினத்தில் நடத்தப்போவதாக அரசு கூறுகின்றது. அந்தத் தேர்தல் 2019 ஆம் ஆண்டு வரை ஒத்தி வைக்கப்படுகிறது. 2019 ஆம் ஆண்டிலும் இந்தத் தேர்தல் நடை பெறுமா என்பது சந்தேகமாகவே உள்ளது.

தற்போதுள்ள தேர்தல் சட்டதிட்டங்களின்படி மாகாண சபையொன்றின் பதவிக்காலம் முடிந்ததும் அதற்கான தேர்தலை உடனடியாக நடத்தும் அதிகாரம் தேர்தல் ஆணையகத்துக்கு உள்ளது. அதை நடத்த விடாமல் 20ஆவது சட்ட வரைவைக் கொண்டுவர அரசு முயற்சி செய்து வரு கின்றது. இந்தச் சட்ட வரைவுக்குப் பொதுவாக்கெடுப்பொன்று அவசியம். இந்த நிபந்தனையை அரசு மீற முற்பட்டால் நாங்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வோம்.- என்றார்.



இலங்கையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கமைந்து சிறந்து விளங்கும் தலங்களில் ஒன்றாகவும் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றாகவும் மிகவும் பழைமை வாய்ந்ததாகவும் காணப்படும் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னை நாதஸ்வாமி ஆலயத்தின் மகோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 28 தினங்கள் மஹோற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெறும். எதிர்வரும் 3 ஆம் திகதி நடேஷர் உற்சவமும் 4 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் 5 ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் 6 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும். (எ)

# எயிட்ஸ் நோய்க்கு மருந்து கண்டுபிடித்த இலங்கையருக்கு பிரிட்டனில் கௌரவம்



இலங்கை இளைஞருக்கு பகிங்ஹாம் மாளிகையில் பிரிட்டன் ராணியின் அதியுயர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சாதனையாளரான ரகித மாலேவத கொழும்பு வைத்தியப் பரிசோதனை நிலையம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பரிசோதனையாளராகக் கடமையாற்றுகிறார்.

உலகத்தையே உலுக்கிக் கொண்டிருக்கும் எச்.ஐ.வி யை குணப்படுத்தும் மருந்தை ரகித நாலந்த பாடசாலையில் கல்விப் பயிலும் காலத்திலேயே கண்டு பிடித்துள்ளார்.

எச்.ஐ.வி.தொற்றுடையவர்களை இது வரை குணப்படுத்தக்கூடிய சிகிச்சை முறை ஒன்றை எவரும் கண்டுபிடித்திராத நிலையில், தடுப்பு மருந்தைக் கண்டு பிடித்த

## பூநகரியில் இன்று நடமாடும் சேவை

மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு ஜனாதிபதியின் மக்கள் நடமாடும் சேவை பூநகரி பிரதேச செயலகப் பிரிவில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

இதன் மூலம் காலங்கடந்த இறப்பு,பிறப்புப் பதிவுகளை மேற்கொள்ளல், பிறப்பு, இறப்பு விவாகச் சான்றிதழ், பிரதி வழங்கல், தேசிய அடையாள அட்டை, மாற்றுத்திறனாளிகளுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதல், முதியோர் அடையாள அட்டை வழங்குதல், செவிப்புலனற்றோருக்கான அடையாள அட்டைக்கான பதிவுகள், மூக்குக் கண்ணாடி வழங்குதல், காணி உரிமம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு - ஓய்வூதியத் திணைக்களச் சேவைகள், தொழிற்றுறைத்திணைக்கள சேவைகள், பொதுவான வைத்திய சேவைகள், சிறுதொழில் முயற்சி தொடர்பான அறிவுரைகள், மோட்டார்ப் போக்குவரத்துத் திணைக்களச் சேவைகள், வங்கிச் சேவைகள், சமுர்த்தித் திணைக்களச் சேவைகள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்தநிகழ்வில் சகல அமைச்சுக்கள் திணைக்களங்களிலிருந்தும் அலுவலர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதுவரை தீர்வு காணப்படாத மேற்படி பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இதில் பொதுமக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றுக் கொள்ளுமாறு பூநகரிப் பிரதேச செயலர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## குவைத்தில் தீ! இலங்கைப் பெண் உயிரிழப்பு!

குவைத்தில் வீடு ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் இலங்கைப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குவைத்தின் அடான் பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அரப் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

இந்தத் 'தீ விபத்தில் இலங்கைப் பெண்ணும், பிலிப்பைன்ஸ் பெண்ணும் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தீப்பரவல் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில்வீட்டில்இருந்தஇரண்டு பெண்களையும் காப்பாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அது பலனளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமனம்பெற்ற யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி வி.புவிதரன் ஆகியோருக்கு பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத்தினரால் நடத்தப்பட்ட பாராட்டு நிகழ்வின் போது... (இ

# ஆயுதம் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் மீன்வாடி அகற்றப்பட்டு நேற்று அகழ்வு

## தடயங்கள் ஏதும் சிக்கவில்லை; பேசாலையில் சம்பவம்

– மன்னார் செய்தியாளர் வாஸ் கூஞ்ஞ –



மன்னார், ஓக. 12

மன்னார் பேசாலை பகுதியில் ஆயுதக் கிடங்கு ஒன்று இருப்பதாக மன்னார் வலய குற்றத் தடுப்புப் பிரிவுக்கு வழங்கப்பட்ட இரகசியத் தகவலைத் தொடர்ந்து அவ்விடத்தை அகழ்வு செய்தபோது எவ்வித பொருள்களும் காணப்படவில்லை.

இந்தச் சம்பவம் பற்றி தெரிய வந்ததாவது:–

கடந்த இரு தினங்களுக்கு முன் பேசாலை 4ஆம் வட்டாரம் கடற்கரையோரத்திலுள்ள மீனவர் கொட்டகை ஒன்றில் நடுச்சாமவேளையில் இனம்தெரியாத நபர் அந்தக் கொட்டகையின் தரையை உடைத்த சத்தம் கேட்டுள்ளது. அதை ஒரு மீனவபெண் கண்டதும் அந்த நபர் தப்பியோடியுள்ளார். இந்தச் சம்பவம் அப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியதுடன் இதற்குள் ஆயுதக் கிடங்கு இருப்பதாக மன்னார் வலய குற்றத்தடுப்புப்பிரிவு பொலிஸாருக்கு தகவல் கசியவே அந்த இடம் பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டது. மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது.

அதைத் தொடர்ந்து நேற்று நண்பகல் மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஆசீர்வாதம் கிறே சியன் அலெக்ஸ்ராஜா முன்னிலையில் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்ப திகாரி அஜந்த ரொட்றிக்கோ, பேசாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.டீ.எம். சிறில் மற்றும் மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரனி டீ மெல் உட்பட சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் சகிதம் அடையாளம் காணப்பட்ட அந்த மீனவரின் மீன்வாடி அகற்றப்பட்டு அந்த நிலப் பகுதி ‘பெக்கோ’ மூலம் தோண்டப்பட்டது.

கீழே நீர் ஊற்று காணும் வரைக்கும் தோண்டப்பட்ட போதும் அங்கு சந்தேகத்துக்குரிய எந்தவித தடயப் பொருள்களும் தென்படவில்லை. (இ–112)

# பலாலி விமான நிலையத்தைப் பார்வையிட்ட கரவெட்டி பாடசாலை மாணவர்கள்







யாழ்ப்பாணம், ஓக. 12

இராணுவக் கட்டுப்பாட்டின் உயர் பாதுகாப்பு வலயமாக காணப்பட்டு வரும் பலாலி பாதுகாப்பு வலயத்தினுள் காணப்படும் பலாலி விமான நிலையத்தைப் பார்வையிடுவதற்காக கரவெட்டி child jesus pre-school மாணவர்கள் 48 பேரும் ஆசிரியர்கள் 05 பேரும் பெற்றோர்கள் 48 பேரும் உத்தியோகபூர்வமாக அனுமதிபெற்று நேற்று வெள்ளிக்கிழமை அங்கு வருகை தந்திருந்தனர் என்று பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர். மாணவர்களுக்காக பாதுகாப்புப் படையினர் தேநீர் உபசார ஏற்பாடுகள் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இது நல்லிணக்கத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ

# யாழ்.பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்க ‘நீதம்’ நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 12

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கத்தின் வருடாந்த “நீதம்” நூல் வெளியீட்டு விழா சட்ட மாணவ சங்கத் தலைவர் அ.றொமல்சன் தலைமையில் இன்று முற்பகல் 10.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் கலந்துகொள்ளவுள்ளார். சட்டத்துறைசார்ந்த அத்தனை பேராளர்களையும் சட்ட மாணவர் சங்கத்தினர் அன்புடன் அழைக்கின்றனர். (இ

யாழ். மண்ணில் முதன் முறையாக சினிமா பாடல்களுடன்
பிரபல தென்னிந்தியப் பாடகர் கலைமாமணி
உன்னிகிருஷ்ணன்
உத்ரா உன்னிகிருஷ்ணன்
இணைந்து வழங்கும்
இன்னிசை பாடிவரும்...
மாபெரும் இசை நிகழ்ச்சி
இன்று மாலை 6.00 மணிக்கு

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு: K.T.பிரசாத்
யாழ். ஸ்ரான்லி வீதி லிங்கம் கூல்பார் முன்பாக உள்ள மைதானம் (வெலிங்டன் தியேட்டர்)
டிக்கெட் பெற்றுக் கொள்வதற்கு....
பூபாலசிங்கம் புத்தகசாலை T.P: 021 222 6693
மற்றும்
நெல்லியடி த போன் சொப் (The Phone Shop) T.P: 077 285 0285
டிக்கெட்டுக்களை நிகழ்ச்சி நடைபெறும் நுழைவாயிலிலும் பெற்றுக்கொள்ளலாம்.
Event Management C.A.C Tel: 077 550 4910
டிக்கெட்டுக்கள்: 300/= 500/= 1000/=

தேவை
★ பக்க வடிவமைப்பாளர் (Page Maker) (InDesign, Photoshop தெரிந்தவர்கள்)
★ தட்டச்சாளர் (Typesetter)
அனுபவம் உள்ளவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையை கீழ்கண்ட முகவரிக்கு தபால் மூலம் அல்லது Email மூலம் அனுப்பி வைக்கவும்.
காலைக்கதிர்
30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
தெ.பே: 021 222 3000
Email: kalaikkathirnews@gmail.com

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.08.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.